# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 43 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை உரு.20


“தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்” “நாடென்ப நாடா வளத்தன..”

## எவ்வா வளமும் இருந்தும்..தமிழ்நாடு ஏன் கடன்பட்டு வாழ வேண்டும்..

**‘என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்..ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்..‘**

**கடந்த காலத்தில் ஆட்சி செய்த அரசுகள் 13 இலக்கம் கோடி கடன் வைத்து விட்டதற்கு அந்த அரசுகளின் செயல்திறன் இன்மை மட்டுமே காரணமா?..**

## ஒரு பக்கம் பலநூறு இலக்கம் கோடியை இந்திய அரசு சூறையாடிக் கொண்டு செல்வதற்கு வழி விட்டுவிட்டு, அவற்றைத் தடுத்து நிறுத்தத் துணிவின்றி வெளிநாடுகளிடமும் உலக வங்கியிடமும் கடன் பெறுவது தமிழ்நாட்டு அரசின் கோழைத்தனமான நடவடிக்கையில்லையா..

### தமிழ்நாட்டில் இருந்து இந்திய அரசால் என்னென்ன வகையில் எல்லாம், எவ்வளவு அளவில் எல்லாம் செல்வம் சூறையாடப்படுகிறது என்பதைப் பாருங்கள்…

ஜிஎஸ்டி வரி வழியாக மட்டும் ஆண்டுக்கு ஒரு லட்சத்து 32 ஆயிரம் கோடி பறித்துச் செல்லப்படுகிறது..

68 சுங்கச்சாவடிகள் வழி ஆண்டுக்குத் தோராயமாக 4100 கோடி உருபா வழிப்பறிக் கொள்ளையடிக்கப்படுகிறது..

நெய்வேலி நிலக்கரி வழியாக ஆண்டுக்குத் தோராயமாக 15,300 கோடி அள்ளிக் கொண்டு போகப்படுகிறது..(1956 தொடங்கி இன்று வரை கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும்.. அதற்குத் தமிழ்நாட்டிற்கு ஒரு விழுக்காடுகூட பங்குத்தொகை (ராயல்டி) கிடைப்பதில்லை)

நரிமணம் கன்னெய்(பெட்ரோல்) உள்ளிட்ட இந்திய எண்ணெய் நிறுவன வழியாக ஆண்டுக்குத் தோராயமாக 8 லட்சத்து 75 ஆயிரம் கோடி உறிஞ்சப்படுகிறது..(நரிமணம் கன்னெய் நிறுவனம் 1993 முதல் செயல்படுகிறது..)

சேலம் இரும்பு வழி ஆண்டுக்கு 3 இலக்கத்து 64 ஆயிரம் கல்லெடை(டன்) இரும்பு எடுக்கப்பட்டு, தோராயமாக அந்த நிறுவனத்தின்வழி ஆண்டுக்கு ஒரு இலக்கத்து 2500 கோடி கொண்டு செல்லப்படுகிறது..(1981 ஆம் ஆண்டு முதல் நடைபெறுகிறது..)

### இவையன்றி..

கல்பாக்கம் (1970 முதல்), கூடங்குளம் (1997முதல்) அணுமின் நிலையங்கள் வழியான வருவாய்கள்.. நெய்வேலி உள்ளிட்ட பிற அனல் மின் நிலையங்கள் வழியான வரவுகள்.. (கழிவுகளாலும் கதிர்வீச்சுகளின் பாதிப்புகளாலும் தமிழ்நாடு அழிந்து கொண்டிருப்பது தனிச்செய்தி..)

பெரம்பூர் தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலை (1955 ஆண்டு முதல்..) இன்றைய தேஜஸ், வந்தே பாரத் வண்டிகளின் தரம் வாய்ந்த பெட்டிகள் உள்ளிட்ட உருவாக்கப்படும் நிலையில் பெரும் ஊதியத்தில் நடந்து கொண்டிருக்கிற தொழில் நிறுவனத்தின் வருவாய்கள்..

திருச்சியைத் தலைமையாகக் கொண்ட பாரத மிகுமின் (பி எச் இ எல்) தொழிலகத்தின் (1956 இல் தொடங்கப்பட்டதிலிருந்து) தோராயமாக ஆண்டுக்கு 35 ஆயிரம் கோடி வருவாய் பெறுகிறது இந்திய அரசு…

**சென்னையில் உள்ள பாரத மின்னணுவியல் நிறுவனம் வழியான வருவாய்..**

**சென்னை பெட்ரோலியம் நிறுவனம் வழியான வருவாய்.. உர நிறுவனங்கள் வழியான வருவாய்..**

**சென்னை ஆவடி திண்ணூர்தித் தொழிற்சாலைகள், திருச்சி துப்பாக்கித் தொழிற்சாலைகள் வழியான வரவுகள்..**

**உதகையில் உள்ள இந்துஸ்தான் படச்சுருள் நிறுவனம் வழியான வருவாய்..**

**சென்னை, தூத்துக்குடி உள்ளிட்ட துறைமுகங்கள் அவற்றிலிருந்து வரும் வருவாய்கள்..**

**சென்னை, மதுரை, கோவை உள்ளிட்டுத் தமிழ்நாட்டில் இருக்கும் வானூர்தி நிலையங்களின் வழியாக வரும் வரவுகள்..**

**தமிழ்நாடு முழுக்கச் செல்லும் தொடர்வண்டிகள் வழியான (தோராயமாக ஆண்டுக்கு 14 ஆயிரம் கோடி) வரவுகள்..**

**வானூர்தி நிலைய, துறைமுகங்கள் வழியாகக் கையாளப் பெறும் சரக்குகள் வழியானச் சுங்கவரி வழியான வரவுகள்..**

**வருமான வரிகள் வழி (இந்தியாவிலேயே நான்காவது இடத்தில் வருமான வரி தமிழ்நாட்டில் பெறப்படுகிற வகையில் ஆண்டுக்கு இரண்டே முக்கால் லட்சம் கோடி அளவில்) வரும் வருவாய்கள்..**

**கலால் வரிகள் வழியான வரவுகள்...**

## இவையன்றி..

**கடல் பரப்பு வழி வரவு, ஐஐடி, இந்தியப் பல்கலைக்கழகம், கேந்திரிய வித்யாலயா உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் வழி வரவு, பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களின் வழி வரவு, ஐ எஸ் ஆர் ஓ உள்ளிட்ட வானியல் ஆய்வு நிறுவனங்கள் வழியான வரவு,**

**இந்திய அரசு நிறுவனங்கள் ஆளுமைத் துறையில், கப்பல் போக்குவரத்துத் துறை, வான் துறை, படைத்துறை உள்ளிட்ட இடங்களுக்கான நிலப்பறிப்பு..**

**என்கிற வகையில் எல்லாம் பல நூறு இலக்கம் கோடித் தொகைகளை, செல்வங்களை இந்திய அரசு தமிழ்நாட்டில் இருந்து பறிந்துக் கொண்டு செல்லுகிற பொழுது...**

**வளமான தமிழ்நாடு வருவாய் இழந்து எப்படித் தாக்குப் பிடிக்க முடியும்..**

**அவற்றைத் தட்டிக் கேட்கிற துணிவு தேர்தல் கட்சிகள் எவற்றிடமும் இல்லை.. எல்லா தேர்தல் கட்சிகளும் ஏதோ ஒரு வகையில் பங்கு பெறுவதும் பணிந்து போவதுமாகவே உள்ளன..**

**தமிழ்நாட்டு உரிமைகளுக்கான இயக்கங்களே இவற்றை உணர்ந்து மக்களிடம் உணர்த்தி மக்கள் போராட்டங்கள் வழி மட்டுமே மீட்டெடுக்க முடியும்.. தமிழ்நாட்டை அரசியலாக மட்டுமன்றிப் பொருளியலாகவும் காக்க முடியும்..**

**தமிழ்நாட்டின் இயக்கங்கள் சிந்தித்தாக வேண்டும்..**

# ஆரியப்பார்ப்பனியஎதிர்ப்பே தமிழ்த்தேசியத்திற்கு வழி..

.பார்ப்பனியம் என்பதைப் பார்ப்பனர்கள் என்ற அளவோடு சுருக்கிச் சிலர் கருத்துரைக்கிறார்கள்..பார்ப்பனியம் என்பது ஐந்து கூறுகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது...

1. சமஸ்கிருத அதிகாரத்தை அனைத்து மொழிகளின் மீதும் அனைத்து மட்டங்களிலும் திணித்து அதிகார வெறித் தன்மையோடு நிறுவுவது..

2. வர்ண அமைப்பு முறையைச் சாதிய அமைப்பு நிலைகளோடு இணைத்து அடுக்கு முறைகளில் அதிகாரப்படுத்தி கட்டிக் காப்பது..

3. வேத, புராண, சாஸ்திரங்களை வரலாறு போல் புனைவுபடுத்தி நிலைப்படுத்திக் காட்டி அனைவர் அறிவையும் அனைத்து உண்மை வரலாற்றையும் மழுங்கடித்து அழிப்பது..

4. அனைத்து வழிபாட்டு முறைகளையும் வாழ்க்கை முறைகளையும் சடங்குகள் என்கிற பெயரில் கட்டாயப்படுத்தி இந்து மதம் என்கிற போர்வைக்குள் அடைத்து அடக்கி வைத்திருப்பது..

5. அனைத்து மொழி இன அடையாளங்களையும் உரிமைகளையும் நசுக்கி அடக்கி இந்தியத் தேசம்,(சமஸ்கிருதத்திற்கு என்று தனித் தேசம் இல்லாததால் இந்தியாவையே அதற்கான தேசமாக அடையாளப் படுத்துவது) இந்திய இனம், (சமஸ்கிருதம் - ஆரிய இனத்திற்கானது என்று சுருங்கிவிடக் கூடாது என்பதற்காக இந்திய அரசாட்சிக்குரிய மக்களை எல்லாம் சமஸ்கிருதத் தொடர்புடைய இன மக்கள் என்று இணைத்துக் காட்டுவது) இந்தியப் பண்பாடு, (தமிழ்ப் பண்பாடு, கேரளப் பண்பாடு, பஞ்சாபியப் பண்பாடு, காஷ்மீரப் பண்பாடு என்ற பண்பாடுகளை எல்லாம் தங்களின் பண்பாடு என்று சொல்லிக் கொள்ள முடியாத பார்ப்பனியம் தனக்கான பண்பாடாக இந்தியப் பண்பாட்டை அறிவித்துக் கொள்வதுடன் அதையே அனைவருக்குமான பண்பாடு என்று கட்டாயப்படுத்துகிறது), இந்திய வரலாறு (வேத, வைதீகப் பார்ப்பனிய வரலாற்றையே இந்திய வரலாறென்று காட்டிக் கொள்கிறது) - என்பதான அதிகாரத்திற்குள் அடக்கி வைத்திருப்பது.. அதன் வழி அந்தந்த மொழித் தேசங்களின் அடையாளங்களை உரிமைகளைப் பிரிவினைவாதம், தேசவிரோதம் என்று இழித்துரைப்பது..

ஆக, இந்த ஐந்து நிலைகளையும் தன் அதிகாரங்களாகக் கொண்டதே பார்ப்பனியம்..

அறியாமையின் காரணமாகவோ, அடக்குமுறைக்கு அடிபணிந்து போகிற காரணமாகவோ தமிழர்கள் பலரும் ஏதோ ஒரு நிலையில் பார்ப்பனியத்திற்கு ஆட்பட்டிருக்கிறார்கள்..

இந்த ஐந்து நிலைகளிலிருந்தும் அந்தந்த அதிகாரப் போக்குகளை எதிர்க்காமல் ஆரியப் பார்ப்பனியத்திலிருந்து நம்மை மீட்டுக் கொள்ளாமல் நம் இன உரிமையை, வாழ்க்கையை உறுதி செய்ய முடியாது..

பாரதிக்கும், உ வே சாமிநாதர்க்கும் தமிழ் மீது பற்றிருக்கலாம்.. தமிழ்ப் புலமையையும் அவர்கள் பெற்றும் இருக்கலாம்.. ஆனால் மேற் சொன்ன ஐந்து அதிகாரங்களில் ஒன்றைக்கூட அவர்கள் விட்டவர்கள் அல்லர்... மறுத்தவர்களும் அல்லர்...

பார்ப்பனியத்தை எதிர்த்த நம் தமிழ் அறிஞர்கள் பலரும்கூட இந்த ஐந்து நிலைகளிலிருந்தும் பார்ப்பனியத்தை எதிர்த்தவர்கள் என்று சொல்லிவிட முடியாது..

ஆக, இந்த ஐந்து நிலைகளில் இருந்தும் பார்ப்பனியத்தை எதிர்க்காமல் போனால் தமிழ்த் தேசிய இன உரிமைகளை மீட்கவும் முடியாது.. அதன் அதிகாரத்தை நிறுவவும் முடியாது..

இந்த ஐந்து நிலைகளிலும் பார்ப்பனியத்தை எதிர்காமல், இந்தியப் பெரு முதலாளியத்தை எதிர்க்காமல், வல்லரசியத்தை எதிர்க்காமல் தமிழ்த் தேசம் பேசுவது வெற்று வாய்ச்சவடால் பேச்சாகவே இருக்கும்.. ●

# இந்தியப் பொதுவுடைமைக் கட்சியரே.. உங்களை நோக்கித்தான் பேசுகிறோம்..

**பொழிலன்**
தமிழக மக்கள் முன்னணி

உங்களை நோக்கித்தான் இவற்றை முன்வைக்கிறோம்..

அண்மையில் இடதுசாரிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை மூன்று பொதுவுடைமைக் கட்சிகள் இணைந்து உருவாக்கியுள்ளன..




அதற்கென்று பன்னிரண்டு பேர் கொண்ட குழு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

தேர்தல் அரசியலுக்காக அல்லாமல் தமிழர் உரிமைகளுக்காகவும், இடதுசாரி அரசியலைப் பரப்புவதற்காகவும் இந்த ஒருங்கிணைப்பு நடந்துள்ளதாக அறிவித்திருக்கிறார்கள்..

இந்த ஒருங்கிணைப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்..

அதேபோது, அவர்கள் மேலும் சிலவற்றைக் கவனிக்கவும் மீளாய்வு செய்யவும் வேண்டுமான கருத்துகளையே கீழே குறிப்பாகக் கூறியிருக்கிறோம்..

சாதி ஒழிப்பு நோக்கம் கொண்டோர்..
பெரியாரிய உணர்வாளர்கள்..
அம்பேத்கரிய உணர்வாளர்கள்..
திருவள்ளுவ அறநெறி ஒப்புரவியர்கள்.. எனப் பொதுமைக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட அனைவரும்தாம் உங்களை நோக்கிப் பேசுகிறோம்..

நூறாண்டுகளுக்கும் மேலாகப் பொதுவுடைமைக் குமுகத்தை உருவாக்கும் இலக்கு நோக்கிச் செயல்பட்டு வருகிற உங்கள் கட்சிகளிடம்தாம் பேசுகிறோம்..

பிரித்தானிய வல்லாட்சியர் தங்கள் சுரண்டல் நலனுக்காக உருவாக்கிய இந்திய அரசை அப்படியே தங்கள் அதிகார நலனுக்காக உருப்படுத்திக் கொண்டவர்கள் ஆரியப் பார்ப்பனியக் கருத்துடையவர்கள். அவர்கள் ஆர். எஸ். எஸ். எனும் இயக்கத்தைத் தொடங்கி, தங்களுடைய கருத்துடையதாகவே இந்தியா இருக்க வேண்டும் என்பதற்காக அதற்குப் பாரததேசம், இந்துஸ்தானம் என்றெல்லாம் பெயர்களைப் புனைந்து கொண்டதோடு பழம் புராணக் கதை அளப்புகளை எல்லாம் வரலாறு போல் திரித்து இந்திய வரலாறு என்று உருவாக்கிக் காட்டினர்.. பல்வேறு மொழி, இன, குமுக, வரலாற்று வாழ்வியல் முறைகளைக் கொண்ட அடையாளங்களை எல்லாம் மறுத்து இந்தியாவை ஒற்றைக் குமுகம் போல் அடையாளப்படுத்திப் பரப்பிவருகின்றனர்..

ஆனால்,

பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம் உள்ளிட்ட பல பகுதிகளை இணைத்துப் பிரிட்டிசார் இந்தியா எனப் பெயரிட்டு உருவாக்கிய போது, பொதுவுடைமையர்கள் தாங்கள் உருவாக்கிய கட்சிக்கு இந்தியப் பொதுவுடைமைக் கட்சி என்று பெயரிட்டுக் கொண்டனர்.

பாகிஸ்தான், வங்காளம், நேபாளம் இவையெல்லாம் பிரிக்கப்பட்டு எஞ்சிய பகுதிதான் இந்தியா என்ற பின்னர், பொதுவுடைமையர்களும் அந்த எஞ்சிய பகுதியையே இந்தியா என்று ஏற்றுக்கொண்டனர்..

இந்தியா என்பதை ஒற்றைக் குமுக அமைப்பைக் கொண்டதாகவும் ஒப்புக்கொண்டனர்..

ஆரியப் பார்ப்பனியக் கருத்தாளர்களும், காங்கிரசும் இந்தியாவைத் தேசம் என்ற போது, இவர்களும் இந்தியாவைத் தேசம் என்றனர்..

எதனினும் இந்தியத்தேசிய ஒற்றுமையே அடிப்படையானது என்று காங்கிரசுக்காரர்களும், ஆர். எஸ். எஸ்.- உம் சொல்லும் போது பொதுவுடைமைக் கட்சியர்களும் தேச ஒற்றுமையே முதன்மையானது என்று கூறிக் கொண்டனர்..

பிரிட்டிசு இந்திய ஆண்டைகளின் இந்தியாவையும், அதன் பிறகு ஆரியப் பார்ப்பனிய அதிகார வகுப்பின் இந்தியாவையும் பாதுகாப்பதுதான் பாட்டாளி வகுப்பின் அரசியல் என்பதான அரசியல் மயக்கம் அவர்களிடம் நோய் போல் தொற்றிக் கொண்டது..

இந்தியாவிற்குள் அடக்கப்பட்டிருக்கும் பல்வேறு தேசிய இன மக்களின் மீதான அடக்குமுறைகளை எதிர்த்துப் பொதுவுடைமைக் கட்சிகள் குரல் கொடுத்து விடவில்லை.. போராடிடவில்லை.. அது பாட்டாளி வகுப்பைப் பிரிப்பதாகும் என்றும், பாட்டாளிகளுக்கு மொழி இல்லை, இனமில்லை, தேசம் இல்லை என்றும் தேசிய இனங்களின் பாட்டாளிகளிடம் பேசத் தொடங்கி விட்டனர்..

வியட்நாம், கம்பூச்சியா, இலாவோஸ் ஆகிய தேசங்களை இணைத்த இந்தோ சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 1930 இல் தொடங்கப்பட்டு, நடைமுறைத் தவறின் காரணமாக மீளாய்வு செய்து, 1951இல் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியும், அதன் பிறகு இலாவோசு கம்யூனிஸ்ட் கட்சியாகவும் கம்பூச்சியா கம்யூனிஸ்ட் கட்சியாகவும் தனித்தனியே கட்சிகள் கட்டிப் புரட்சி செய்து உழைக்கும் மக்களின் ஆட்சியை நிறுவின.

ஆனால், இந்தியப் பொதுவுடைமைக் கட்சி அந்த வகையில் எந்தத் தன் திறனாய்வும் செய்து கொள்ளவில்லை. இந்தியாவிற்குள் இருக்கிற தேசிய இனங்களின் உரிமைகளைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை, அந்தத் தேசிய இனங்கள் கடுமையாக இந்திய அதிகார வகுப்பினால் ஒடுக்கப்பட்ட போது, நசுக்கப்பட்ட போதுகூட அவற்றிற்காக, அவற்றின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவில்லை.. மாறாக இந்திய ஒருமைப்பாடு.. இந்திய ஒருமைப்பாடு.. என்று இந்திய அதிகார வகுப்போடு இணைந்து கொண்டு தாங்களும் வறட்டுக் கூச்சலே போட்டுவந்தனர்..

மேலும் இந்தியாவை ஓர் ஒற்றைக் குமுக அமைப்பாகவே அரசியல் வழி வரையறுத்துக் கொண்டனர். அரைக்காலனிய, அரை நிலவுடைமை அமைப்பு என்றனர்.. இந்தியப் பாட்டாளி வகுப்பு என்று ஒட்டுமொத்தமாக இந்தியாவில் அடைக்கப்பட்டுள்ள பாட்டாளி வகுப்புகளை எல்லாம் ஒரே வகுப்பு அடையாளத்தோடு நிறுத்தினர்..

இவையெல்லாம் ஒருபுறம் இருக்க..

காங்கிரஸ் கட்சியை எதிர்த்துச் சில சூழல்களில் பாஜகவோடும், பாஜகவை எதிர்த்துப் பல சூழல்களில் காங்கிரசோடும் கூட்டுச் சேர்ந்தே தேர்தல் அரசியலில் பங்கு எடுத்துக் கொண்டனர்..

இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனப் பாட்டாளி வகுப்புகளைப்

புரட்சி நோக்கம் கொண்டு குமுக மாற்றத்திற்காக அணிந்திரட்டாமல், தேர்தல்களில் வாக்கு போடுவதற்காக மட்டுமே அரசியல் பேசி வருகின்றனர் பொதுவுடைமைக் கட்சியினர்..

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவு, திமுகவோடு, அதிமுகவோடு என்று மாறி மாறி அரசியல் கூட்டணி வைத்துத் தங்கள் இலக்கு நோக்கிச் செல்லாமல் தேர்தல் அரசியல் கூட்டணிக் கட்சிகளின் அரசியலையே தாங்களும் பேசி ஏறத்தாழ 100 ஆண்டுகள் வரலாற்றைத் தொலைத்து நிற்கின்றனர் பொதுவுடைமை கட்சியினர்..

இறுதியாக இப்போது, குடியரசுத் தலைவர் ஆட்சி வந்து விடக்கூடாது என்பதற்காக விஜய் முதலமைச்சராக ஆவதற்கு என்று கூறி வெளியில் இருந்து ஆதரவு என்கிற அளவில் முடிவெடுத்திருக்கின்றனர்..

பன்னாட்டு முதலாளியதிற்கு எதிராகப் போராடுகிற, போராடி உழைக்கும் மக்களின் நலனுக்கான ஒரு புதிய குடியாட்சி அமைப்பை நிறுவுகிற நோக்கம் நூறாண்டுகளுக்குப் பிறகும் அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை..

வருகிற ஆகசுட்டு 6ஆம் நாள் தொடங்கி ஆகசுட்டு 15ஆம் நாள் வரை இந்தியா முழுமையும் அரசியல் விழிப்புணர்வு இயக்கத்தை இந்தியப் பொதுவுடைமைக் கட்சி நடத்தப் போகிறதாம்.. செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாட்டில் இடதுசாரிகள் இணைந்து பெரும் பேரணியை நடத்த போகிறார்களாம்..

அத்தகைய இணைவுகளும், பேரணிகளும் வரவேற்புக்குரியதே ஆனாலும், அவர்கள் முன்வைக்கிற அரசியல் விழிப்புணர்வு என்பது என்ன என்பதே முதன்மையானது..

'**நாட்டைக் காப்போம், சனநாயகத்தைக் காப்போம், அரசியல் சட்டத்தைக் காப்போம்**' - என்ற முழக்கத்துடன் முடிவடைகிறது..

செப். 1ஆம் நாள் தில்லியில் மிகப் பெரிய செங்கொடிப் பேரணி நடத்தத் திட்டமிட்டுள்ளதாம் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி. அரசியல் விழிப்புணர்வு மூலமாகக் கிராமம் முதல் பெருநகரம் வரை மக்களைச் சந்தித்து நாட்டில் உள்ள தற்போதைய சிக்கல்கள் குறித்து மக்களிடம் எடுத்துக் கூறப்போகிறார்களாம்.

இந்தியாவின் முதல் தலைமை அமைச்சர் நேரு இந்தியாவின் வளர்ச்சிக்கும், கட்டமைபுக்கும் அடித்தளமிட்டாராம்,பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்தினாராம். கனரகத் தொழிற்சாலைகளை உருவாக்கினாராம். நேரு காலத்தில் திட்டக்குழு மூலம் இந்தியா போன்ற பெரிய நாட்டில் ஏற்றத்தாழ்வு இல்லாமல் சம பொருளாதாரம் ஏற்படுத்தப்பட்டதாம். அதன் மூலம் மாநிலங்களுக்குப் பாகுபாடின்றி நிதிபங்களிப்பு வழங்கப்பட்டதாம். எனவே, நேருவுடன் - பிரதமர் மோடியை ஒப்பிடுவது சரியானது அல்லவாம் - என்று அந்தக் கட்சி வெளியிட்ட அறிக்கை சொல்லுகிறது..

எவ்வளவு பெரிய கொடுமை..

பொதுவுடைமைக் கட்சியின் அளவு இவ்வளவுதானா?

புரட்சி வழிபட்ட குமுக மாற்றம் என்பது என்ன ஆனது?

மாநில உரிமைகளையெல்லாம் முற்றும் முழுமையாகப் பறித்துக் கொண்டிருக்கிற வல்லாதிக்க இந்திய அரசைக் கண்டித்து ஒரு வரியாவது வாய் திறக்க முடியாதா?

இருக்கக்கூடிய அரசு அமைப்பு முழுக்க முழுக்கப் பன்னாட்டு முதலாளியத்தின் எடுபிடி அரசியல் அமைப்பாக இருக்கிறது என்று அம்பலப்படுத்தி, உழைக்கும் மக்கள் தலைமையிலான ஓர் அரசை நிறுவுகிற முனைப்பைப் பொதுவுடைமைக் கட்சிகள் அனைவரையும் இணைத்துத் தங்கள் தலைமையில் மேற்கொள்வதாக அறிவிக்கிற துணிவு அவற்றிடம் இருக்க வேண்டாமா?

இந்தியாவை ஒன்றியம் என்று அடையாளப்படுத்திப் பேசுகிற பொதுவுடைமைக் கட்சி, மாநிலங்களின் உரிமைகளில் மாநில அரசுகளின் வழியான இணைப்புகளின் வழி உண்மையான ஒன்றியத்தைக் கட்டமைப்பதற்கு முயல வேண்டாமா?

என்ன அரசியல் ஞாயத்தோடு,

தமிழ்நாட்டில் விஜயோடும்..

இந்தியாவில் காங்கிரசோடும்.. கூட்டுச் சேர்ந்து கொண்டு எதிர்காலத்தில் யாரை யாரையெல்லாம் வெளியில் இருந்து ஆதரவு தெரிவித்து ஆட்சியில் அமர்த்தப் போகிறார்கள்..

இவைதாம் பொதுவுடைமைக் கட்சிகள் செய்கிற அரசியல் பணிகளா?

மிகவும் மனம் வருந்தியும், சினத்தோடும் இந்தக் கேள்விகளை நாம் எழுப்ப வேண்டியிருக்கிறது..

அன்புத் தோழர்களே..

இனியாவது மீள்ஆய்வு செய்யுங்கள்..

மாநிலங்களின் அளவில் முதலில் கட்சிகளைக் கட்டுங்கள்..

உங்களின் அகில இந்தியக் கட்சியை இந்தியக் கட்சி என்றில்லாமல், மாநிலக் கட்சிகளின் ஒன்றியக் கட்சியாக மாற்றுங்கள்..

அதே தன்மையில் ஒவ்வொரு மாநிலங்களும் மாநிலங்களுக்கான அரசியல் பொருளியல் நிலைப்பாடுகளைப் பகுத்தாய்ந்து வேலைத் திட்டங்களை முன் வையுங்கள்..

தமிழ்நாட்டில் தமிழ்நாட்டின் பொதுவுடைமைக் கட்சிகளின் தலைமையில் அனைத்துக் குடி(சன)நாயகக் கட்சிகளை, இயக்கங்களை எல்லாம் ஆதரவாக அணி சேருங்கள்..

உங்களை, நீங்கள் மேற்கொண்டு இருக்கிற பொதுவுடைமைக் குமுகத்தைப் படைக்கும் இலக்கை நோக்கிச் செயல்பட வழி தேடுங்கள்..

இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் இந்தியா, இந்திய ஒற்றுமை, இந்தியப் பாதுகாப்பு - என்று பேசி இந்திய அதிகார வகுப்பை வலுப்படுத்திக் கொண்டிருக்கப் போகிறீர்கள்?

இந்திய முதலாளியச் சார்புக் கட்சிகளை அரவணைத்துக் கொண்டோ அவற்றுக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டோ அரசியல் பேசிக் கொண்டிருப்பீர்கள்?..

இன்றைக்கு அடிப்படைத் தேவைக்குரியவை..

**இந்தியாவைக் காப்பதும்..**

**மக்களாட்சியைக் காப்பதும்..**

**இந்திய அரசியல் சட்டத்தைக் காப்பதும்..**

- என்பதல்ல..

**மக்களைக் காப்பதும்,**

**மாநிலங்களைக் காப்பதும்,**

**மாநில அரசுகளை அதிகாரமிக்கதாக மாற்றுவதும்..**

**இந்தியப் பார்ப்பனிய பாசிச அதிகார வகுப்பை வீழ்த்துவதும்**

**பன்னாட்டு முதலாளியத்தை விரட்டுவதும்..**

உடனடித் தேவைகளாக இருக்கின்றன..

இவற்றைச் செய்வதன் வழியேதான்..

ஒரே நாடு.. ஒரே மொழி.. ஒரே இனம்.. ஒரே வரலாறு.. ஒரே பண்பாடு..

என்கிற பாசிச வெறித்தனத்தை வீழ்த்த முடியும்...

பன்னாட்டு முதலாளியத்தை விரட்டி அடிக்க முடியும்..

எனவே மீளாய்வு செய்யுங்கள் தோழர்களே..

தமிழக வரலாற்றில் உங்களின் செயற்பாடுகள் தமிழக மக்களால், இளைய தலைமுறையினரால் ஏற்கப்படுகிற அளவிற்குத் திட்டமிடுங்கள்....

தமிழ்நாடு 43- திங்களிதழ் / தி.பி. 2057, ஆடவை (சூன் - சூலை 2026)

# அமர்நாத் இராமக்கிருட்டிணன் அவர்களது கீழடி அகழ்வாய்வு அறிக்கையை உடனே வெளியிடுக!

## கூட்டறிக்கை

2014 - 2016 காலகட்டத்தில் இந்தியத் தொல்லியல் ஆய்வகம் (Archeological Survey of India - ASI ) சார்பாகக் கீழடி அகழாய்வு, தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் இராமக்கிருட்டிணன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. கீழடியில் கிடைக்கப் பெற்ற பொருட்கள் மற்றும் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் 982 பக்கங்கள் கொண்ட அறிக்கையினை அமர்நாத் இராமக்கிருட்டிணன் அவர்கள் இந்தியத் தொல்லியல் ஆய்வகத்திற்கு 2023 சனவரி மாதத்தில் முறைப்படி சமர்ப்பித்துள்ளார். அறிவியல் அடிப்படையில் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் கீழடியின் காலம் கி.மு.800 - 500 வரை என்பதாக அவர் வரையறுத்துள்ளார்.

ஆனால், போதிய உண்மையான காரணங்களோ, மதிப்புயர் நியாயங்களோ இன்றி அமர்நாத் அவர்கள் சமர்ப்பித்த ஆய்வறிக்கையினை மறுத்து, அவரின் ஆய்வறிக்கையை மேம்படுத்தி அனுப்புமாறு இந்தியத் தொல்லியல் ஆய்வகம் அவருக்கே திருப்பி அனுப்பியது. இந்த அறிக்கையை அனுப்பிய இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் உறுப்பினர் குழுவில் உள்ள எவரும் கீழடிக்கு வந்ததே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தியத் தொல்லியல் ஆய்வகம் தனக்கு அனுப்பிய அறிக்கை செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்ப அடிப்படையில் உருவாக்கப்பட்டதாக அமர்நாத் அவர்கள் தெளிவுபடுத்துகிறார்.

பல்வேறு தரவுகளின் அடிப்படையில் கீழடியின் தொன்மையைக் கணித்த அமர்நாத் அவர்களின் காலத்தை இந்தியத் தொல்லியல் ஆய்வகம் ஏற்கத் தயாராக இல்லை. அதை மாற்ற வேண்டும் என அது வலியுறுத்துகிறது. இதுதான் இச்சிக்கலின் சாரம்.

ஆனால், எவ்வகைப் புறச் செல்வாக்கிற்கும் உள்ளாகாமல், உண்மையான மற்றும் சரியான அறிக்கையைக் கடமை உணர்வோடும் மனச்சாட்சியோடும் சமர்ப்பித்ததாகக் கூறி, தனது ஆய்வறிக்கையை மாற்றி அமைக்கும் பேச்சுக்கே இடமில்லை என அமர்நாத் அவர்கள் திட்டவட்டமாக எழுத்து வடிவில் தெரிவித்து விட்டார். ஆனால் இந்தியத் தொல்லியல் ஆய்வகம் அறிக்கையைத் திருத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருவதை ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



துறைவாரியான கடிதப் போக்குவரத்தோடு இந்த முக்கியமான செய்தி முடங்கி விடுவது ஏற்புடையதல்ல! அமர்நாத் அவர்கள் தனது ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்து மூன்று ஆண்டுகளாகியும் கீழடி ஆய்வறிக்கையை வெளியிடாமல் இருப்பது பெரும் ஐயத்தை உண்டாக்குகிறது. இதனால் உண்மை நிலை என்ன என்பதை அறிய முடியாமலும் இருக்கிறது. எனவே இத்தகைய குழப்பத்தைப் போக்கும் வகையில், அமர்நாத் இராமக்கிருட்டிணன் அவர்களின் கீழடி ஆய்வறிக்கையின் மூலப்படியை இந்தியத் தொல்லியல் ஆய்வகம் உடனடியாகப் பொதுவெளியில் வெளியிட்டு, அனைவரின் ஐயத்தையும் போக்க வேண்டும்.

மேலும், அமர்நாத் இராமக்கிருட்டிணன் அவர்களின் நிலைப்பாட்டை ஆதரித்தும், இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் தொல்லியல் அறம், விதிகள், விழுமியங்களுக்கு எதிராகத் தமிழர் நாகரிகத்தின் தொன்மையை ஏற்க மனமின்றிச் செயல்படும் போக்கினைக் கண்டித்தும் முந்தைய மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு, தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்திருந்தது.

தமிழகத்தின் தொன்மையை அறிவியல் வழியில் நிறுவும் அமர்நாத் இராமக்கிருட்டிணன் அவர்களின் கீழடி அகழாய்வு அறிக்கையை வெளியிட இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் அரசும் உரிய அனைத்து வழிகளிலும் முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

கூட்டறிக்கை ஒருங்கிணைப்பு

கண. குறிஞ்சி

(தமிழ்நாடு மக்கள் உரிமைப் பேரவை)

கூட்டறிக்கைக்கு இசைவு அளித்தோர் ....

பழ. நெடுமாறன் (உலகத் தமிழர் பேரவை) அரிபரந்தாமன் (மேனாள் உயர்நீதிமன்ற நீதிபதி) எஸ்.வி.ராசதுரை (மார்க்சிய- பெரியாரிய அறிஞர்) ச.தமிழ்ச்செல்வன் (சாகித்திய அகாதமி விருதாளர்) தேவி பாரதி (சாகித்திய அகாதமி விருதாளர்) மதுக்கூர் இராமலிங்கம் (தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்) டிராட்ஸ்கி மருது (ஓவியர்) களப்பிரன் (தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்) ப.பா.ரமணி (தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்) கோவன் (மக்கள் கலை இலக்கியக் கழகம்) பிரளயன் (நாடகவியலாளர்) ஆழி செந்தில்நாதன் (மொழிச்சமன்மைக்கும் உரிமைகளுக்குமான பரப்பியக்கம்) சாவித்திரி கண்ணன் (பத்திரிகையாளர்) அய்யநாதன் (ஊடகவியலாளர்) கொளத்தூர் மணி (திராவிடர் விடுதலைக் கழகம்) கு.இராமகிருஷ்ணன் (தந்தை பெரியார் திராவிடர்கழகம்) தோழர் தியாகு (தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம்) ப.பா. மோகன் (மூத்த வழக்கறிஞர்) பொழிலன் (தமிழக மக்கள் முன்னணி) வாலாசா வல்லவன் (மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி) திருமுருகன் காந்தி (மே 17 இயக்கம்) கார்முகில் (தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சி) கே.பாலகிருஷ்ணன் (ஐக்கிய விவசாயிகள் முன்னணி - SKM) ஓவியா (புதிய குரல்) த.செயராமன் (தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்) ச.பாலமுருகன் (மக்கள் சிவில் உரிமைக் கழகம்) பாலன் (தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சி - (மா.லெ.மா.) மீ.த.பாண்டியன் (தமிழக மக்கள் பண்பாட்டுக்கழகம்) சுப.உதயகுமாரன் (பச்சைத் தமிழகம்) வீ.அரசு (பேராசிரியர்) பேரா. இரா.முரளி (மக்கள் கல்விக் கூட்டியக்கம்) பேரா.பிரபா கல்விமணி (தாய்த் தமிழ்ப்பள்ளி, திண்டிவனம்) ப.சிவக்குமார் (பேராசிரியர்) க.பஞ்சாங்கம் (பேராசிரியர்) அ.மங்கை (பேராசிரியர்) நா.மணி (பேராசிரியர்). கோச்சடை (பேராசிரியர்) பிரின்சு கஷேந்திர பாபு (பொதுக் கல்விக்கான மாநில மேடை) சு.மூர்த்தி (கல்வி மேம்பாட்டுக் குழு) ரெங்கையா முருகன் (வ.உ.சி. அறக்கட்டளை) திருப்பூர் சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றம்) அறிவுமதி (கவிஞர்) இந்திரன் (எழுத்தாளர்) ஆதவன் தீட்சண்யா (எழுத்தாளர்) பாமரன் (எழுத்தாளர்) சுப்ரபாரதிமணியன் (எழுத்தாளர்) அழகிய பெரியவன் (எழுத்தாளர்) ஜீவசுந்தரி (எழுத்தாளர்) அப்பண்ணசாமி (எழுத்தாளர்) குட்டி ரேவதி (எழுத்தாளர்) கவின்மலர் (எழுத்தாளர்) சமந்தா (எழுத்தாளர்) பொதியவெற்பன் (எழுத்தாளர்) ஷமாலன் (எழுத்தாளர்) நக்கீரன் (சூழலியல் எழுத்தாளர்) மோகனரங்கன் (கவிஞர்) கவிதா பாரதி (திரைக்கலைஞர்) மு.சுந்தரன் (ஓவியர்) பொ.வேல்சாமி (ஆய்வாளர்) தமிழ் காமராசன் (ஆய்வாளர்) ஆர்.ஆர். சீனிவாசன் (ஆவணப்பட இயக்குநர்) வி.முத்தையா (காக்கைச் சிறகினிலே இதழாசிரியர்) க.சந்திரசேகரன் (வையம் இதழாசிரியர்) மா.பூங்குன்றன் (தென்மொழி இதழாசிரியர்) தங்க .செங்கதிர் (மானுடம் இதழாசிரியர்) வாஞ்சிநாதன் (வழக்கறிஞர்) பானுமதி (வழக்கறிஞர்) ஆத்மநாதன் (வழக்கறிஞர்) ' தமிழ் இராசேந்திரன் (வழக்கறிஞர்) பாவேந்தன் (வழக்கறிஞர்) விஜய் தரணிஸ் (வழக்கறிஞர்) கி.வே. பொன்னையன் (தற்சார்பு விவசாயிகள் சங்கம்) செந்தில் (இளந்தமிழகம்) நிலவன் (நீரோடை) அருள்தாஸ் (மக்கள் இயக்கங்களின் தேசியக் கூட்டணி - ழிகிறிவி) சங்கரலிங்கம் (சுயாட்சி இயக்கம்) அரசெழிலன் (நாளை விடியும் இதழ்) தங்க குமரவேல் (தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம்) நிலவழகன் (மக்கள் தமிழகம் கட்சி)

# சனாதனம் காப்பதற்குப் போராடும் பார்ப்பன வஞ்சகர்களும், துணை போகும் சூத்திர ஏமாளிகளும்!

- பேராசிரியர் த.செயராமன்
தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்.

2026 மே 12 அன்று, தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நிலையில், தமிழக சட்டப்பேரவை சபாநாயகராக ஜே.சி.டி. பிரபாகர் தேர்வு செய்யப்பட்டதை அடுத்து, அவருக்கும் புதிய அரசுக்கும் வாழ்த்து தெரிவித்துப் பேசிய சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்,

"அரசும் எதிர்க்கட்சியும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக இணைந்து செயல்பட வேண்டும் என்று கூறி, நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து உரிய முன்னுரிமை பெற வேண்டும் என்றும், "விரைவில் இங்கு ஆளுநர் உரை நிகழ்த்த இருக்கிறார் பதவியேற்பு விழாவில் நடந்த தவறு பேரவையில் நடப்பதற்கு நீங்கள் அனுமதிக்கக் கூடாது, நாங்களும் அனுமதிக்க மாட்டோம்!" என்றும் கூறிவிட்டு, தனது உரையின் இறுதியில், "மக்களைப் பிரிக்கும் சனாதனம் நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டும், வெல்க தமிழ்! வாழ்க தமிழ்நாடு!" எனக் கூறி முடித்தார்.

சட்டப்பேரவையில சனாதனம் குறித்துப் பேசியது சர்ச்சையான நிலையில் எதிர்கட்சித் தலைவர் உதயநிதி விளக்கமளித்துள்ளார்.

இது குறித்துத் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், "தமிழ்நாடு சட்டப்பேரவையில நான் பேசும்போது, "மக்களைப் பிரிக்கும் சனாதனம் நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டேன். இதற்காக என்னைச் சிலர் விமர்சனம் செய்கிறார்கள்.

இதற்கெல்லாம் பயப்படும் ஆள் நான் இல்லை. எதிர்ப்பிலேயே வளர்ந்தது தான் திராவிட இயக்கம். அந்த வகையில், ஒரு சின்ன விளக்கத்தை மட்டும் கொடுக்க விரும்புகிறேன். சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் யாரும் கோயிலுக்குப் போகக் கூடாது என அர்த்தம் இல்லை.

கோயிலில் மட்டுமல்ல, சமூகத்திலும் அனைவருக்கும் சமஉரிமை இருக்க வேண்டும் என்று அர்த்தம். மேல் சாதி - கீழ்ச் சாதி என மக்களைப் பிரிப்பதைத்தான் நான் ஒழிக்க வேண்டும் என சொன்னேன்."

"பெரியார் - அம்பேத்கர் - அண்ணா - கலைஞர் பேசிய கொள்கையைத்தான் நானும் பேசினேன். நாங்கள் யாருடைய கடவுள் நம்பிக்கைக்கும் எதிரானவர்கள் இல்லை. ஆனால், சமத்துவமின்மை யையும், ஒடுக்குமுறையையும் கடுமையாக எதிர்ப்போம் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வள்ளுவர் சொன்னதுதான் எங்கள் வழி" என்று தெரிவித்துள்ளார்.

**சனாதனத்தின் மீது உதயநிதி ஸ்டாலின் முதல் சாடல் - 2023**

2023- செப்டம்பர் 2 அன்று, தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்க மாநாட்டில் பங்கேற்றுப் பேசும்போது, சனாதனத்தை நோய்களுடன் ஒப்பிட்டுப் பேசினார். "டெங்கு, மலேரியா, கொரோனா ஆகிய நோய்களை நாம் எதிர்க்க மாட்டோம்; அதனை எதிர்க்கக் கூடாது; ஒழிக்கவே முயற்சி செய்வோம். அதுபோல சனாதன தர்மமும், அதை எதிர்ப்பதைவிட ஒழிப்பதே சிறந்தது" என்று பேசினார். இது இந்திய அளவில் பெரும் சர்ச்சையை உருவாக்கியது. 2023 செப்டம்பர் முதல் டிசம்பர் வரை நாடு முழுவதும் அவர் மீது பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த சாமியார் ஒருவர் உதயநிதி ஸ்டாலின் தலைக்கு 10 கோடி விலை வைத்தார். ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் உதயநிதி ஸ்டாலினின் நாக்கை வெட்ட வேண்டும், கண்ணை நோண்ட வேண்டும் என்றார்.

2024 சனவரி மாதம் உதயநிதி ஸ்டாலின் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனு அளிக்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை ரத்து செய்யக் கோரியும், அனைத்தையும் ஒன்றாக இணைக்கக் கோரியும் உச்ச நீதிமன்றத்தில் மனு அளிக்கப்பட்டது. 2025 செப்டம்பர் 1 அன்று, உச்சநீதிமன்றத்தில் உதயநிதி ஸ்டாலின் மனு விசாரணை செய்யப்பட்டது.

நீதிபதி விக்ரம்நாத் தலைமையிலான அமர்வு இந்த வழக்கை விரிவாக விசாரிக்க வேண்டி இருக்கிறது என்பதால், 2026 பிப்ரவரி மாதம் மூன்றாம் வாரத்தில் வழக்கைப் பட்டியலிட்டு விசாரிக்க உத்தரவிட்டது.

மேலும், வழக்குகளில் உதயநிதி மீது நடவடிக்கை எடுக்க உச்சநீதிமன்றம் தடைவிதித்தது.

2026 மார்ச் 19 அன்று போபாலில் உதயநிதிக்கு எதிராகப் புதிய வழக்கு ஒன்று தொடரப்பட்டது. ஆகவே வழக்குகளை ஒன்றாக இணைக்கும் ஆணையில் உரிய திருத்தம் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த காலங்களில் பல்வேறு புகார்தாரர்கள் தொடர்ந்த வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் இருந்தன. ஆனால், உச்ச நீதிமன்றம் இந்த விவகாரத்தில் கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பித்தது. அதன்படி, உச்ச நீதிமன்றத்தின் முன் அனுமதியின்றி உதயநிதி ஸ்டாலின் மீது புதிதாக எஃப்.ஐ.ஆர்- கள் பதிவு செய்யக் கூடாது எனத் தடை விதிக்கப்பட்டது.

சனாதனத்தை எதிர்ப்பது இனப்படுகொலை: அமித் மாளவியாவின் குருட்டுத்தனம்! 'சனாதன ஒழிப்பு' பற்றித் தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு முற்போக்கு கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர் சங்க மாநாட்டில் சனாதனம் குறித்து பேசியது ஒரு இனப்படுகொலைக்குச் (Genocide) சமமானது என்று பாசகவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு தலைவர் அமித் மாளவியா கடுமையாக விமர்சித்தார்.

**சமூக வலைதளத்தில் எதிர்வினை ஆற்றிய அமித் மாளவியா**

'80 சதவிகிதமான மக்களை இனப் படுகொலைக்கு ஆளாக்க சொல்கிறீர்களா?' என்று பதிவிட்டு இருந்தார். இதற்கு எதிராகவே முதல் தகவல் அறிக்கை திருச்சி நகரக் காவல் துறையால் அவர் மீது பதிவு செய்யப்பட்டிருந்தது.

உதயநிதி ஸ்டாலின் சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசியது இந்து மதத்திற்கு எதிரான வெறுப்புப் பேச்சு என்றும், அதற்கு எதிராகவே தான் சமூக வலைதளத்தில் பதிவிட்டதாகவும் அமித் மாளவியா தெரிவித்தார்.

திருச்சிராப்பள்ளி திமுக பிரமுகர் கே ஏ வி தினகரன் திருச்சிராப்பள்ளி நகர மத்திய குற்றப்பிரிவு காவல்துறை ஆய்வாளரிடம் அமித் மாளவியா மீது ஒரு புகார் மனுவை அளித்தார். இதை இரத்து செய்யக்கோரி அமித் மாளவியா சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதி எஸ். ஸ்ரீமதி அமர்வில் விசாரணை செய்யப்பட்டது. 2026 சனவரி 20 அன்று ஸ்ரீமதி தமிழ்நாடு அரசு காவல் துறையின் முதல் தகவல் அறிக்கையை இரத்து செய்து தீர்ப்பளித்தார்.

**சார்புத் தன்மையுள்ள தீர்ப்பு!**

சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வின் நீதியரசர் எஸ். ஸ்ரீமதி வழங்கிய தீர்ப்பு அதிர்ச்சி அளிக்கக் கூடியது.

உதயநிதி ஸ்டாலினின் அமித் மாளவியா மீதான முதல் தகவல் அறிக்கையைச் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை நீதியரசர் எஸ். ஸ்ரீமதி இரத்து செய்தார். தம்முடைய தீர்ப்பில் அமித் மாளவியாவின் வழக்கறிஞர் தன் கட்சிக்காரர் சார்பாக எப்படி வாதங்களை வைப்பாரோ, அதே வகையில் நீதிபதி தன் தீர்ப்பை எழுதியிருந்தார்.

"வெறுப்புப் பேச்சைத் தொடங்குபவர்கள் தண்டனையின்றி விடுவிக்கப்படுகிறார்கள். ஆனால் அந்த வெறுப்புப் பேச்சுக்கு எதிர்வினையாற்றியவர்கள் சட்டத்தின் கோபத்தை எதிர்கொள்கிறார்கள் என்ற தற்போதைய நிலையை இந்த நீதிமன்றம் வேதனையுடன் பதிவு செய்கிறது. , ,உதயநிதியின் கருத்துக்கள் வெறுப்புப் பேச்சுக்குச் சமம் என்றும், அதைக் கேள்வி எழுப்புவது ஒரு எதிர்வினை என்றும், நீதிபதி

கூறினார். மேலும் வெறுப்புப் பேச்சைத் தொடங்கிய உதயநிதிக்கு எதிராக சட்டம் செயல்படவில்லை.

அமித் மாளவியாவின் கருத்துகள் திரிக்கப்படவில்லை என்று நீதிமன்றம் கூறியது.

காவல்துறையின் நடவடிக்கைகள் தொடர்ந்தால் மனுதாரர் (அமித் மாளவியா) ஈடுசெய்ய முடியாத இழப்பையும், பாதிப்பையும் சந்திப்பார் என்றும், முதல் தகவல் அறிக்கையை இரத்து செய்ய மனுதாரர் கோர உரிமை உண்டு என்றும் நீதிமன்றம் கருதுகிறது.

இந்த வழக்கைத் தொடர்வது சட்ட செயல்முறையைத் தவறாகப் பயன்படுத்துவதற்குச் சமம் என்று நீதியரசர் கூறினார்.

உதயநிதி ஸ்டாலின், சனாதன தர்மத்தை மலேரியா மற்றும் டெங்கு போன்ற நோய்களுடன் ஒப்பிட்டு, அதை ஒழிக்க' வேண்டும் என்று பேசிய கருத்து, சனாதன தர்மத்தைப் பின்பற்றும் 80% மக்களுக்கு எதிராக இனப்படுகொலைக்கு அழைப்பு விடுப்பது போன்றது என்று நீதியரசர் எஸ். ஸ்ரீமதி கருத்து தெரிவித்தார்.

இந்த வழக்கில் துணை முதலமைச்சரின் வெறுப்புப் பேச்சுக்காக அவர் மீது ஏன் வழக்கு பதிவு செய்யப்படவில்லை? என்று காவல்துறையிடம் நீதியரசர் ஸ்ரீமதி கேள்வி எழுப்பினார்.

"அரசு அதிகாரிகள் அரசியல் சார்பற்றவர்களாக இருக்க வேண்டும். அரசியல் கட்சிக்கு ஆதரவாகச் செயல்படுவது கண்டிக்கத்தக்கது" என்று கருத்து தெரிவித்தார்.

இதன் பொருள் தமிழ்நாடு அரசு அதிகாரிகள் உதயநிதி ஸ்டாலின் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும், வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும், கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதுதான். சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதைக் கேட்டு சாமியார்கள்தாம் கொதிப்படைகிறார்கள் என்பதில்லை, நீதியரசரும் கூட கொதிப்படைகிறார்.

நீதியரசர் ஸ்ரீமதி கூறுகிறார்:

"ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, அமைச்சரின் பேச்சு 80% இந்துக்களுக்கு முற்றிலும் எதிரானது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது, இது வெறுப்புப் பேச்சு என்ற வரம்பிற்குள் வருகிறது.

ஒரு சனாதனியான மனுதாரர் (அமித் மாளவியா), துணை முதலமைச்சரின் வெறுப்புப் பேச்சால் பாதிக்கப்பட்டவர். மனுதாரரின் பதில் பதிவு இந்தியத் தண்டனைச் சட்டத்தின் எந்தப் பிரிவுகளையும் ஈர்க்காது என்பது தெளிவாகிறது. மாறாகத் துணை முதலமைச்சரின் பேச்சு சில குற்றப் பிரிவுகளை ஈர்க்கிறது."

சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை நீதிபதி ஸ்ரீமதி, 2023- ஆம் ஆண்டு சனாதன தர்மம் குறித்து உதயநிதி ஸ்டாலின் பேசிய கருத்துகள் "வெறுப்புப் பேச்சு" என்றும், அது குறிப்பிட்ட ஒரு மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கு எதிரான இனப்படுகொலையைத் (Genocide) தூண்டுவதற்குச் சமம் என்றும் தனது தீர்ப்பில் கூறினார்.

அமித் மாளவியா மீதான எஃப்.ஐ.ஆர் (திமிஸி) வழக்கை இரத்து செய்து அவர் வழங்கிய தீர்ப்பின்படி, உதயநிதி ஸ்டாலினின் பேச்சு இந்தியத் தண்டனைச் சட்டத்தின் (IPC) கீழ் பின்வரும் முக்கிய குற்றப் பிரிவுகளுக்குள் அடங்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது .

பிரிவு 153A (Section 153A): மதம், இனம், மொழி போன்றவற்றின் அடிப்படையில் வெவ்வேறு குழுக்களிடையே பகையை உருவாக்குதல் மற்றும் அமைதிக்குக் குந்தகம் விளைவித்தல்.

பிரிவு 153B (Section 153B): தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் வகையிலான குற்றச்சாட்டுகள் அல்லது கருத்துகளைக் பரப்புதல்.

பிரிவு 295A (Section 295A): வேண்டுமென்றே மற்றும் தீங்கிழைக்கும் நோக்கத்தோடு ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களின் மத உணர்வுகளைப் புண்படுத்துதல்.

பிரிவு 506 (Section 506): குற்றவியல் அச்சுறுத்தல் (Criminal intimidation) விடுத்தல்.

நீதிபதி தனது உத்தரவில், உச்ச நீதிமன்றத்தின் முந்தைய வழிகாட்டுதல்களின்படி, இதுபோன்ற வெறுப்புப் பேச்சுகள் பிரச்சனைகளில் காவல்துறையினர் தானாக முன்வந்து (Suo Moto) மேற்கண்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்திருக்க வேண்டும் என்றும், ஆனால் தமிழ்நாட்டில் உதயநிதி ஸ்டாலின் மீது எந்தவொரு தகுந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் வெளிப்படையாக அதிருப்தி வெளியிட்டார்.

**நீதிபதி ஸ்ரீமதி அளித்த தீர்ப்பு நியாயத்துக்கு புறம்பானது!***
***சனாதனிகளுக்குச் சார்பானது!**

முதல் தகவல் அறிக்கையை இரத்து செய்துள்ள மதுரை உயர் நீதிமன்ற கிளையின் தனி நீதிபதி, அந்தத் தீர்ப்பில் கூறியுள்ள கருத்துகள் நீதியை மறுக்கின்றன. அரசியல் சட்டம் வலியுறுத்தும் விழுமியங்களை உயர்த்திப் பிடிப்பதாகவும் இல்லை. அவர் அளித்துள்ள விளக்கம் இந்து மதஉணர்வு படைத்த சாமியார்களின் வெறிப் பேச்சை ஒத்ததாக அமைந்திருக்கிறது.

சட்டம் குறித்து சாதாரண அறிவு படைத்தவர்களுக்குக் கூட அவருடைய விளக்கம் சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பானது என்ற உணர்வை ஏற்படுத்தும்.

"முழு வழக்கும் 'ஒழிப்பு' என்ற சொல்லைச் சுற்றியே அமைகிறது; அந்தச் சொல் மிகவும் முக்கியமானது. 'அழித்தல்' (என்ற சொல், ஏற்கெனவே உள்ள ஏதோ ஒன்று இருக்கக் கூடாது என்பதைக் குறிக்கிறது. இதைத் தற்போதைய வழக்குக்குப் பொருத்தினால், சனாதன தர்மம் இருக்கக் கூடாது என்றால், சனாதன தர்மத்தைப் பின்பற்றும் மக்களும் இருக்கக் கூடாது என்பதைக் குறிக்கும்.

சனாதன தர்மத்தைப் பின்பற்றும் ஒரு மக்கள்குழு இருக்கக் கூடாது என்றால், அதற்கான சரியான சொல் 'இனப்படுகொலை' (genocide) ஆகும். சனாதன தர்மம் ஒரு மதமாக இருந்தால், அது 'மதப்படுகொலை' (religicide) ஆகும். மேலும், சூழல் அழிப்பு (ecocide), உண்மையழிப்பு (factocide), பண்பாட்டு அழிப்பு, பண்பாட்டு இனப்படுகொலை (culturicide) ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு முறைகள் மற்றும் தாக்குதல்களின் மூலம் மக்களை ஒழிப்பதையும் இது குறிக்கிறது.

எனவே, 'சனாதன ஒழிப்பு' என்ற தமிழ்ச் சொற்றொடர் தெளிவாகவே 'இனப்படுகொலை' அல்லது 'பண்பாட்டு அழிப்பு' என்பதையே குறிக்கும். இத்தகைய சூழ்நிலையில், அமைச்சரின் பேச்சை கேள்விக்குள்ளாக்கிய மனுதாரரின் பதிவை வெறுப்புப் பேச்சாகக் கருத முடியாது"

"80 சதவீத மக்களை இனப்படுகொலை செய்ய சொல்கிறீர்களா?" என்று அமித் மாளவியா கேட்டது குற்றமல்ல. அவர் எழுப்பியது கேள்விதான். அவர் போராட்டம் எதையும் தூண்டவில்லை" என்று கூறுகிறார்.

ஒரு பாஜக தலைவர்கூட இந்த அளவிற்கு அமித் மாளவியாவை ஆதரித்து அறிக்கை தந்திருக்க முடியாது. எந்த ஒரு வழக்கறிஞரும் அமித் மாளவியாவுக்கு இந்த அளவுக்குச் சார்பாக வழக்காட முடியாது. சனாதன ஒழிப்பு என்ற சொல் ஏன் ஒரு வருணப் பிரிவு பிராமணர் என்று மேல் நிலையிலும், பல கோடி மக்கள் சூத்திரர் என்ற நாலாம் வருணப் பிரிவாகக் கீழ் நிலையிலும் இருக்க வேண்டும்? என்ற கேள்வியை எழுப்புகிறது. ஆனால் நீதிபதி ஸ்ரீமதிக்கு அது பல்வேறு படுகொலைகளின் பரிமாணமாகத் தெரிகிறது. இந்தத் தீர்ப்பு நீதிபதியின் சுயவருணச் சார்புத்தன்மையை வெளிப்படுத்துகிறது.

அமித் மாளவியாவின் இனப்படுகொலைச் சித்தரிப்புப் பேச்சுக்கு எதிராகப் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையை இரத்து செய்து உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு பாஜகவினரை பரவசப்படுத்தியது; ஆர்எஸ்எஸ் காரர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது; சாமானிய மக்களையும் சமூக உணர்வாளர்களையும் அதிர்ச்சியில் மூழ்கடித்தது.

2023 இல் உதயநிதி ஸ்டாலின் சனாதன ஒழிப்பு பற்றி பேசிய பேச்சு தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை. அவை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. பல மாநிலங்களில் பதிவு செய்யப்பட்ட எப். ஐ. ஆர். அனைத்தும் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்று உதயநிதி ஸ்டாலின் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இதுவரை உதயநிதி ஸ்டாலின் மீது பதியப்பட்ட வழக்குகள் ரத்து செய்யப்படவில்லை.

2024 மார்ச் 4 அன்று, உச்சநீதிமன்றம் அனைத்து வழக்குகளையும் ஒன்றிணைக்கக் கோரி உதயநிதி ஸ்டாலின் மனு தாக்கல் செய்தபோது அவரைக் கடுமையாக விமர்சித்தது. நீதிபதிகள் சஞ்சீத் கண்ணா, தீபங்கர் தத்தா அமர்வு, " you have abused your right. You are a minister, not a layman. You should know the consequences." - என்று கண்டித்தது. மேலும், அரசியல் சட்டத்தின் கருத்துரிமை சரத்து 19 மற்றும் மதச்சார்பற்ற சுதந்திரம் சரத்து 25 ஆகிய உரிமைகள் பொறுப்புடன் பயன்படுத்தப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டியது. வெறுப்புப் பேச்சு அரசியல் சட்டத்தின் சகோதரத்துவம் மற்றும் பன்மைத்துவ மதிப்புகளுக்கு எதிரானது பொதுப் பொறுப்பில் இருப்பவர்கள் கட்டுப்பாட்டுடன் பேச வேண்டும் என்றும் குறிப்பிட்டது.

பிறப்பின் அடிப்படையில் வேறுபாடு காட்டுகிற சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்று உதயநிதி ஸ்டாலின் கூறியது உச்ச நீதிமன்றத்துக்கு தவறானதாகத் தோன்றுகிறது.

அதே நேரம், சனாதனம் என்ற அந்த வாழ்வியல் முறையே சகோதரத்துவத்திற்கும், சமூகத் தன்மானத்திற்கும் எதிராக இருக்கிறது

என்பதை உச்சநீதி மன்றம் உணரவே இல்லை. உதயநிதி ஸ்டாலின் பேசியது அரசியல் சட்டத்தின் விழுமியத்தைத்தைத்தான் எதிரொலிக்கிறது என்பதை உச்சநீதிமன்றம் உணரவில்லை.

**2026 சட்டமன்ற பேச்சுக்குச் சனாதனிகள் எதிர்ப்பு:**

உதயநிதி ஸ்டாலின் சட்டமன்றத்தில் சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசியதற்கு பாஜக, ஆர் எஸ் எஸ் , விசுவ ஹிந்து பரிசத், இந்து முன்னணி, சனாதன் சன்ஸ்தா மற்றும் பல்வேறு இந்து அமைப்புகள் கொதித்தார்கள். நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க ஓடி இருக்கிறார்கள். 2026 மே 12 அன்று சட்டமன்றத்தில் உதயநிதி ஸ்டாலின் பேசிய பேச்சுக்கு உச்ச நீதிமன்றத்தில் புதிய வழக்கு (நீதிமன்ற அவமதிப்பு) தொடரப்பட்டுள்ளது. சனாதனம் நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டும் என்று பேச்சுக்கு எதிராக வழக்கறிஞர் அமிதா சக்தேவா என்பவர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

உதயநிதி ஸ்டாலினின் சனாதன ஒழிப்புக் கருத்துக்கு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். அதேநேரத்தில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் கிறிஸ்டோபர் திலக் உள்ளிட்டோர் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

ஆட்சியில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட பிறகும் உதயநிதி ஸ்டாலின் திருந்தவில்லை என்றும், அவரை மக்கள் திருத்தும் காலம் விரைவில் வரும் என்றும் பாஜக மகளிர் அணியின் தேசிய தலைவர் வானதி சீனிவாசன் வசை பாடினார்.

உதயநிதி ஸ்டாலினைக் கண்டித்து சென்னை, மதுரை, கோவை மற்றும் திருப்பூர் ஆகிய 4 இடங்களில் இந்து முன்னணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று மாநில தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் அறிவித்தார்.

உதயநிதி ஸ்டாலினின் இந்தப் பேச்சுக்கு பாஜக தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். உதயநிதியின் பேச்சு வட மாநிலங்களிலும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

**சனாதன எதிர்ப்புக்கு சில ஆதரவு குரல்கள்:**

2026 மே 12 அன்று, மதுரை மத்திய தொகுதி தவெக சட்டமன்ற உறுப்பினர். வி. எம். எஸ்.முஸ்தபா, "சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாங்களும் களத்தில் இறங்கியிருக்கிறோம்" என்று தெரிவித்தார்.

"நாங்களும் பெரியாரையும், அம்பேத்கரையும் கொள்கைத் தலைவர்களாகக் கொண்டுள்ளோம்; சனாதனத்தை ஒழிக்கவே நாங்கள் களத்தில் இறங்கியுள்ளோம்" என்று பேசியுள்ளார்.

சனாதன தர்மம் பற்றி உதயநிதி ஸ்டாலின் பேசிய கருத்துகளை அமைச்சர் மற்றும் த. வெ.க. வின் பொதுச் செயலாளர் ஆதவ் அர்சுனா. "உதயநிதி ஸ்டாலின் சனாதன தர்மத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, அதில் உள்ள சாதி முறை மற்றும் பெண்களை அடிமைப்படுத்தும் முறை ஆகியவற்றைத்தான் எதிர்க்கிறார். நாங்களும் அதையேதான் எதிர்க்கிறோம்." எனக் கூறியுள்ளார்.

"தமிழக வெற்றிக் கழகமும், எங்கள் தலைவரும் அனைவரையும் சமமாக நடத்தும் கொள்கையையே கொண்டுள்ளோம். இதில் எங்களுக்கும் அவர்களுக்கும் பெரிய கொள்கை வேறுபாடு கிடையாது. தமிழகம் எப்போதும் சமத்துவத்தின் அடிப்படையிலேயே இயங்குகிறது.

வட இந்தியாவில் சனாதனம் என்றால் அது இந்து மதத்தைக் குறிப்பதாக ஒரு புரிதல் உள்ளது. ஆனால் தமிழகத்தில் சனாதனம் என்பது சமத்துவமின்மையைக் குறிக்கிறது. இந்தப் புரிதல் வேறுபாட்டால்தான் சர்ச்சைகள் எழுகின்றன. நாங்கள் எப்போதும் சமத்துவமின்மைக்கு எதிரானவர்கள், எந்த மதத்திற்கும் எதிரானவர்கள் அல்ல." என ஆதவ் அர்சுனா தெரிவித்துள்ளார்.

மேலும், பல்வேறு தரப்பினரும் தங்களது கண்டனத்தைத் தெரிவித்து வந்த நிலையில், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தனது சமூக வலைதளப் பதிவில், சட்டமன்றத்தில் தனது முதல் உரையிலேயே கோடிக்கணக்கான இந்துக்களின் நம்பிக்கையான சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்று உதயநிதி பேசியிருப்பது, அவரது அரசியல் முதிர்ச்சியின்மையைக் காட்டுகிறது. தொடர்ந்து இந்துக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் பேசுவது கண்டிக்கத்தக்கது என்று பதிவிட்டு இருந்தார்.

இதற்கிடையில், கோவை ராம்நகர் பகுதியில் உள்ள இந்து முன்னணி அலுவலகத்தில் அக்கட்சியின் மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, சனாதானத்தை ஒழிப்போம் என்று சட்டப்பேரவையில் உதயநிதி ஸ்டாலின் பேசி இருப்பது கண்டிக்கதக்கது.

ஏற்கனவே ஜாமீனில் இருக்கும் அவர் இதுபோன்ற கருத்துகளால் இந்துக்களின் வாக்குகளை இழந்து வருகிறார். எனவே, அவரின் இந்தப் பேச்சைக் கண்டித்து வருகின்ற மே 17 ஆம் நாள் சென்னை, மதுரை, கோவை மற்றும் திருப்பூர் ஆகிய 4 இடங்களில் இந்து முன்னணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

**ஆளுநர் ஆர். என். ரவியின் தொடர் சனாதன ஆதரவு பிரச்சாரம்!**

சனாதனத்தை ஆதரித்து தமிழ்நாட்டின் முன்னாள் ஆளுநர் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்தார்.

வடலூரில் திருவருட் பிரகாச வள்ளலாரின் 200வது பிறந்தநாள் தொடர்பான விழா சூன் 21ஆம் நாள் நடைபெற்றது. இந்த விழாவில் பேசிய தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, சனாதன தர்மத்தைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டு, அதை வள்ளலார் பின்பற்றியதாகப் பேசினார். பத்தாயிரம் ஆண்டுகாலப் பாரம்பரியத்தைக் கொண்ட சனாதன தர்மத்தின் உச்ச நட்சத்திரம் வள்ளலார் பெருமான் என்று ஆர். என். ரவி பேசினார்

ஆனால் வள்ளலார் சந்தேகத்திற்கு இடம் இன்றி சனாதனத்தை மறுத்தவர்.

*சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி*

*நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா நவின்றகலைச் சரிதமெல்லாம் பிள்ளைவிளையாட்டே*

*சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட் டலைகின்ற சமய மதப் பேய்பிடியாது*

*மதமெனும் பேய் பிடியாதிருக்க வேண்டும்*

*இச்சாதி இக்குலம் என்றே இருபாடி உலகத்தார் எச்சாதி ஆயினும் என்றே எண்ணுகிலார் - பொச்சாப்புக்கொண்டுலகில் வீணே மடிகின்றார் கொள்நெறிதான்கண்டுமகிழ் வெய்துகிலார் காண்.*

என்று சாதியையும், மதத்தையும்,நால்வருணத்தையும், ஆசிரமங்களையும், ஆசாரங்களையும் கடுமையாக தாக்கியவர் வள்ளலார். ஆனால் வள்ளலாரையை இவர்கள் சீரணிக்க முயற்சிக்கிறார்கள்.

**சனாதன தர்மம் என்பதன் உள்ளீடு...**

சனாதன தர்மம் என்பது என்ன என்பது பற்றிய புரிதல் இப்போதாவது பெறுதல் அவசியம். தாங்கள் விரும்பியபடி எல்லாம் அந்தச் சொல்லுக்கு பலர் விளக்கம் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆளுநர் ரவி பாரதம் சனாதனத்தால் ஆனது என்றார். யோகி ஆதித்யநாத் சனாதனம் பாரதத்தின் தேசிய மதம் என்றார். இங்கு பலர் சாமி கும்பிடுவது, சடங்குகளை அனுசரிப்பது, பெண்கள் கையில் வளையல் அணிந்து கொள்வது, நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்வது, மஞ்சள் பூசிக் கொள்வது - இப்படி எல்லாம் சனாதனத்தை விளக்க முயற்சிக்கிறார்கள்.

சனாதனம் என்பது பிறவியில் ஏற்றத்தாழ்வை கற்பிக்கிறது. ஒட்டுமொத்த சமூகத்தையும் நால்வருணத்திற்குள் அடக்குகிறது. ஒரு வருணத்தை மேல் நிலையிலும், பிற வருணங்களைக் கீழாகவும், நான்காவது நிலையில் சூத்திரர்களையும் வைக்கிறது. சூத்திரர்களுக்கும் கீழாகப் பஞ்சமர்கள் இருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டம் சமத்துவத்தையும், சனநாயகத்தையும், சமூக நீதியையும் கற்பிக்கக் கூடியது என்றால், சனாதனம் என்பதை அது முதலில் தடை செய்ய வேண்டும்.

ஏனெனில் அரசியல் சட்டம் பேசும் விழுமியங்களுக்கு சனாதனம் நேர் எதிரானது.

**காஞ்சி காமகோடி பீடாதிபதி சனாதனமும் வருணாசிரமமும் ஒன்றுதான் என்கிறார்!**

காஞ்சி காமகோடி மடத்தில் 68வது ஆச்சாரியராக நியமிக்கப்பட்ட சந்திரசேகரேந்திர சரஸ்வதி, வர்ண தர்மமே சனாதன தர்மம் எனப் பல முறை குறிப்பிட்டிருக்கிறார். இவரது பேச்சுகளின் தொகுப்பான தெய்வத்தின் குரலின் முதல் பகுதியில், "வர்ண தர்மம்" என்ற கட்டுரையில் சனாதன தர்மத்தின் முக்கிய அம்சமே வர்ண தர்மம்தான் என்கிறார் சந்திரசேகரேந்திர சரஸ்வதி.

"ஸநாதன தர்மத்தை ஊதி ஊதி எல்லாரிடமும் பரவச் செய்யலாம் என்பது என்னுடைய பேராசை. அதனால்தான் இதையெல்லாம் சொல்கிறேன். நம்முடைய ஸநாதன மதத்தில் மற்ற மதங்கள் எதிலுமே இல்லாத வர்ண தர்மம் இருப்பதால், இது அவசியமில்லை என்று எடுத்துப் போட்டுவிட்டு நம் மதத்தையும் மற்றவை மாதிரி ஆக்கிவிடவேண்டும் என்று சீர்திருத்தக்காரர்கள் சொல்கிறார்கள்

மற்ற மதங்களில் சகல பிராணிகளுக்கும் அவசியமான பொது தர்மங்களை மட்டும் சொல்லியிருக்கிறது. அவற்றை நம் வைதிக மதமே சாமானிய தர்மங்கள் என்ற பெயரில் சர்வ சனங்களுக்கும் விதித்திருக்கிறது.

மற்ற தேசங்களிலும் சரி, நம் தேசத்திலும் சரி; மற்ற மதங்கள் போய்விட்ட போதிலும் இதுமட்டும் பதினாயிரம் ஆண்டுகளாகப் போகாமல் இருக்கிறதென்றால், அவற்றில் இல்லாத எதுவோ இதில் இருக்கிறது என்றுதானே அர்த்தம்!

அது என்ன என்று பார்த்தால், வர்ண தர்மம்தான் நமக்கு மட்டும் பிரத்தியேகமாக இருக்கிறது. ஆகையால் வர்ண தர்மம் சமூகச் சீர்குலைவுக்கே காரணம் என்று புது நாகரிகக்காரர்கள் சொன்னாலும், இது இருக்கிற நம் சமூகம்தான் சீர்குலையாமல் இருந்து வருகிறது.

நவீன யுகத்தில் 'சமத்துவம்' (equality) என்று சொல்லப்படுவதைவிட சிலாக்கியமாக, சமூகத்துக்கு ரொம்பவும் க்ஷேமம் விளைவிப்பதாகப் பழைய வர்ண தர்மத்தில் எதுவோ இருந்திருக்க வேண்டும் என்று தானே ஏற்படுகிறது?

அதனால்தான் சமூகத்தைப் பலவாகப் பாகுபாடு செய்திருக்கிற நம் மதம் ஒன்று மட்டுமே, இத்தனை எதிர்ப்புகள் இருந்தும் விழமாட்டேன் என்று இன்று வரைக்கும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்து வருகிறது. "

மக்களை நான்காகப் பிரித்து, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தர்மம் என்று இருப்பதே வர்ண தர்மம் என்றும், அந்த வர்ண தர்மமே சனாதன தர்மம் என்றும் சங்கராச்சாரியார் விளக்குகிறார்.

## சனாதன தர்மம் கூறுவது என்ன?

பிறப்பின் அடிப்படையில் மேல் கீழாக நான்கு வருணங்களைக் கொண்ட சமூகக் கட்டமைப்பும், அவர்களுக்கு விதிக்கப்பட்ட மீற முடியாத கடமைகளும் சனாதனம் ஆகும். ஆரியனின் வாழ்வில் அனைத்துப் பரிமாணங்களும் சனாதனத்தில் பேசப்படுகின்றன. சனாதனம் என்ற சொல்லுக்கு "நிலையானது, மாறாதது" முடிவற்றது , என்று பொருள்.

எது மாறாதது? சமூகத்தின் தலைமை பிராமணர்கள்! பார்ப்பன தலைமை என்பது ஒருபோதும் மாறாது! நான்காவது வருணமாகிய சூத்திரன் அடிமை. அவன் நிரந்தர அடிமை! அவன் ஒருபோதும் மேல்நிலைக்கு வரவே முடியாது. இது மாறாதது.

தர்ம சூத்திரங்களும், தர்ம சாஸ்திரங்களும் நால்வர்ண பகுப்பு முறையும், அவர்களுக்கு விதிக்கப்பட்ட கடமையும் மாறாது என்று கூறுகின்றன. இதுதான் சனாதனம், அதாவது நிலையானது.

மனுஸ்மிருதியின் முதன்மைத் தொகுப்பு கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடையிலான காலகட்டத்தில் உருவானது.

அந்த மனுஸ்மிருதி சமூகக் கட்டமைப்பையும், பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளையும் வகுத்துத் தந்தது. ஒரு சூத்திரன் எவ்வளவு வீரமுள்ளவனாக இருந்தாலும் அவன் ஒரு மேல் வர்ணமாகிய சத்திரியனுடைய வேலையை செய்யக்கூடாது. அது போன்று ஒரு சத்திரியன் எவ்வளவு படித்திருந்தாலும் அவனுக்கு மேலாக இருக்கக்கூடிய பிராமணனைவிட உயர்ந்தவன் இல்லை; அவன் தொழிலை மேற்கொள்ளக்கூடாது. பிராமணன் வேதம் ஓதுவதும் பயிற்றுவிப்பதும், சத்திரியன் நாட்டை நிர்வகிப்பதும் படையாளுகை செய்வதும், வைசியன் வணிகம் செய்வதும் வளம் பெருக்குவதும், சூத்திரன் ஏனைய மூன்று உயர்சாதிகளுக்கும் தொண்டு செய்வதும் தனக்கென்று எதுவும் வைத்து,க் கொள்ளாமல் வாழ்வதும், நிரந்தர அடிமையாக இருப்பதும் என்பதே இவர்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகள்.

### சநாதந தர்மம் - 1905

1905 இல் "சநாதந தர்மம்" என்ற நூல் காசியில் வெளியிடப்பட்டது . அந்நூல் பிராமண மாணவர்களுக்கு கற்பிப்பதற்காகவே பாட நூலாக உருவாக்கம் செய்யப்பட்டது நூலின் முன் பக்கம் இவ்வாறு பதிவு செய்கிறது

ஐக்கோர்ட் வக்கீலும் மதுரை பிரஹ்ம ஞானசபை பிரசிடெண்ட்டுமாகிய நாராயண ஐயரால் மொழிபெயர்க்கப்பட்டது. மொழிபெயர்ப்பாளரின் நூன்முகம் இப்படி பதிவு செய்கிறது:

"மகாசேத்திரமாகிய காசியில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிற பிரதான ஹிந்து வித்யாசாலை சபையார்கள் நம் மாணாக்கரின் உபயோகத்துக்காக சர்வ ஹிந்துக்களுக்கும் பொதுவான ஆரிய மதக் கொள்கைகள், தருமங்கள் இவைகளின் சாராம்சங்களை நம் வேத சாஸ்திரப் புராணாதிகளிலிருந்து எடுத்துத் தொகுத்து, சநாதந தருமம் எனப் பெயரும் இட்டு ஆங்கில பாசையில் ஓர் அருமையான நூல் வெளியிட்டார்கள். அது மூன்று பிரிவு உள்ளது இவ்வரிய நூலைத் தமிழில் மொழிபெயர்க்கும்படி எனக்கு அனுமதி கொடுத்த காசிப் பிரதான ஹிந்து வித்யாசாலை சபையார்க்கும் ..... , "

என்று தொடர்ந்து பேசி நன்றி தெரிவிக்கிறார். இறுதியில் ப. நாராயணன்,

15 .11 .1905 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பொருளடக்கம் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

முதல் பாகம்:

வஸ்து ஒன்று- பல, யக்ஞம், கர்மம் முன் ஜென்ம செயல்.

இரண்டாம் பாகம்:

சம்ஸ்காரங்கள், சௌசம் - சுத்தம், ஆச்சிரமங்கள்: பிரம்மசரியா, கிருஹஸ்தா , வனப்பிரஸ்தா, சன்னியாசம்

நான்கு வருணங்கள்:

பிராமணா , சத்திரியா, வைசியா , சூத்திரா

மூன்றாம் பாகம் :

தர்ம முறைகள், புண்ணிய கருமங்கள், பெரியோர்களிடம், சாமானியர்களிடம், கீழோரிடம் ஒழுகும் ஒழுக்க முறை உள்ளிட்டவை.

சனாதன தர்மத்தின் மிக முக்கியமான கூறு வருணாசிரம தர்மம் ஆகும். இந்த வர்ணாசிரம தர்மம் பல ஸ்ருதிகளால் வலியுறுத்தப்படுகிறது. மனுஸ்மிருதி பெண்கள் அனைவரும் சூத்திரர்கள்; சூத்திரர்களுக்குக் கல்வியைத் தரக்கூடாது; கணவனை இழந்த பெண்கள் உயிர் வாழவே கூடாது போன்றவற்றை வலியுறுத்துகிறது. சூத்திரன் குற்றமில்லாதவன் என்று நிரூபிக்க பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கையால் பிடிக்க வேண்டும், தண்ணீரில் மூழ்க வைத்து அதில் இறக்காமல் இருந்தால் அவன் குற்றமற்றவன் என்று முடிவு செய்ய வேண்டும். ஆனால் பிராமணன் சத்தியமாக என்று கூறினால் மட்டுமே போதும். சூத்திரன் திட்டினால் நாக்கை அறுக்க வேண்டும்; பிராமணரைச் சாதியைக் கூறித் திட்டினால் பத்து அங்குல காய்ச்சிய இரும்பு தடியை அவன் வாயில் செருக வேண்டும்; மேல் வர்ணத்தாரோடு ஒரே ஆசனத்தில் அமர்ந்தால் அவன் ஆசனத்தை அறுக்க வேண்டும்; கூலி கொடுக்காமலே சூத்திரனிடம் வேலை வாங்கலாம்; பிராமணனுக்குத் தொண்டு செய்யவே அவன் பிறந்தவன் என்று மனு ஸ்மிருதியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு தவளையை கொன்றால் என்ன பிராயச்சித்தமோ அதுதான் ஒரு சூத்திரனைக் கொன்றாலும் செய்தால் போதுமானது; பிராமணன் அல்லாதவன் உயர் குலத் தொழிலைச் செய்தால் அவன் பொருளைப் பிடுங்கிக் கொண்டு விரட்டி விடலாம்; பிராமணன் உண்ட எச்சில் உணவு, உடுத்திய துணி ஆகியவற்றையே சூத்திரன் உடுத்த வேண்டும்; பெண்கள் சலன புத்தி உள்ளவர்கள், துரோகம் செய்யக்கூடியவர்கள், அவர்கள் விபச்சார தோசம் உள்ளவர்கள் என்று மனு ஸ்மிருதி குறிப்பிடுகிறது. பெண்கள் தந்தை, கணவன், மகன் பாதுகாப்பில்தான் இருக்க வேண்டும்; ஒருபோதும் அவர்கள் சுதந்திரமாக இருக்கக் கூடாது என்று வலியுறுத்துகிறது.

கடந்த காலத்தில் சம்புகன் மேல் வருணத்தான் செய்யும் தவத்தைத் தானே செய்ததால் கழுத்து அறுக்கப்பட்டான், ஏகலைவன் சத்திரியனைப் போல வில்லைப் பயன்படுத்தியதால் கட்டை விரல் வெட்டப்பட்டான்.

கடந்த காலப் பேரரசுகளின் ஆட்சிக் காலத்தில் மனுஸ்மிருதி கடுமையாகப் பின்பற்றப்பட்டது. சமூக ஒடுக்குமுறை நிறைவேற்றப்பட்டது. சோழர்கள் காலத்தில் சுந்தர சோழன் இறந்தபின் அவன் மனைவி வானவன் மாதேவி உடன்கட்டை ஏறினாள். இவள் முதலாம் ராசராசனின் தாய் ஆவாள். முதலாம் இராசேந்திர சோழன் மறைவுக்குப் பிறகு அவன் மனைவி வீரமாதேவி உடன் கட்டை ஏறினாள். உடன்கட்டை ஏறுதல் சனாதனத்தின் ஒரு கூறு. 1759 இல் மராட்டியர் ஆண்ட தஞ்சை பகுதியைச் சேர்ந்த கோகிலா எனப்படும் 13 வயது பெண் (பின்னர் குளோரிந்தா) ஹென்றி லிட்டில்டண் என்ற ஆங்கிலேய அதிகாரியால் உடன்கட்டையில் எரிக்கப்பட இருந்த சமயத்தில் காப்பாற்றப்பட்டாள். இராமநாதபுரம் சேதுபதி இறந்தபோது அவருடைய 47 மனைவிமார்கள் உடன்கட்டை ஏறினர். திருமலை நாயக்கர் இறந்தபோது 200 மனைவிமார் உடன்கட்டை ஏறினர். 1829 - இல் வில்லியம் பெண்டிங் பிரபு இந்தியாவின் கவர்னர் செனரலாக இருந்தகாலத்தில் ராசா ராம்மோகன் ராய் முயற்சியால் சதி எனப்படும் உடன்கட்டை ஏறும் பழக்கம் தடை செய்யப்பட்டது. உடன்கட்டையில் ஏற்றி எரிக்கப்படும் பெண்ணுக்கு அது வெப்பமாக இருக்காது என்றும், குளிர்ச்சியாகத்தான் இருக்கும் என்றும், அது "சீதாக்கினி "என்றும் காஞ்சி சங்கராச்சாரியார் கூறியிருக்கிறார். உடன்கட்டை ஏறுதல் சனாதன வாழ்வு முறையின் மிக முக்கியமான கூறாக இருந்து வந்திருக்கிறது.

**தேவதாசி முறை பிராமணனுக்கும், நில உடமையாளர்களுக்கும், வரைமுறையற்ற பெண் நுகர்வை அளித்தது. 4 வயது முதல் 12 வயது வரை பெண் குழந்தைகள் தேவதாசிகள் ஆக்கப்பட்டனர். இது சனாதனத்தின் ஒரு கூறு.**

**எட்டு வயதில் குழந்தை திருமணத்தைச் சனாதனிகள் வலியுறுத்தி வந்தனர்.1929 இல் சார்தா சட்டம் பெண் திருமண வயதை 14 ஆக நிர்ணயித்தது. இதுவும் சனாதனவாதிகளின் எதிர்ப்பை மீறியே நடந்தது.**

**பல பகுதிகளில் பெண்களுக்குத் திருமணம் ஆனதும் பார்ப்பனர்களும்**

**உள்ளூர் நிலபிரபுக்களும் பாலியல் சுரண்டலுக்கு உரிமை பெற்றிருந்தனர்.**

**பிராமண , சத்திரிய , வைசிய, சூத்திர வர்ணங்களுக்கான உரிமைகள், உரிமை மறுப்பு, மேல் கீழ் சாதிகள், அவர்களுக்குத் தனி வாழ்விடம், வரையறுக்கப்பட்ட உரிமைகள், வரையறுக்கப்பட்ட தொழில்கள், வரையறுக்கப்பட்ட வாழ்வு முறை, இவற்றை மீறினால் கடும் தண்டனை ஆகியவை அனுசரிக்கப்பட்டன. இவற்றை மீறியதால்தான் மக்களுக்குத் தன்மான வாழ்வு என்ற ஒன்று கிடைத்தது.**

கட்டாயமாகச் செய்யவேண்டிய குலத்தொழில், நாவிதன், வண்ணார் வெட்டியார், பறையடித்தல் போன்றவை சனாதனத்தின் கூறுகள்தாம்.

**சனாதனத்தை மறுக்கும் போதுதான் சமத்துவம், உரிமை பிறக்கிறது!**

சனாதனம் திரும்பத் திரும்ப மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது நாம் காணும் உலகம் சனாதனத்தை மறுத்ததால் நமக்குக் கிடைத்தது. பார்ப்பனர்கள் 'உஞ்சவிருத்தி'தான் செய்ய வேண்டும்; பிச்சை எடுத்துச் சாப்பிடுவதுதான் பிராமணர்களுக்குச் சனாதனம் அனுமதித்த வாழ்வுமுறை. ஆனால் பார்ப்பனர்கள் இன்று இறைச்சி ஏற்றுமதி வரை செய்கிறார்கள். இது சனாதன மறுப்பு இல்லையா? நீர் நிலைகளை கடந்தால் சாதிப்பிரஷ்டம் ஆகிவிடுவர் என்பது சனாதனம்; பார்ப்பனர்கள் இன்று கடல் கடந்து செல்லவில்லையா? தங்களுக்கு உரிய கல்வியைத் தாண்டி தொழிற்கல்வியையும் மருத்துவக் கல்வியையும் பார்ப்பனர்கள் பெறுவது சனாதன மறுப்பு இல்லையா?

**அவர்களுக்கு மனுஸ்மிருதி, நமக்குத் திருக்குறள்!**

**அவர்களுக்குச் சனாதனம், நமக்குப் பொதுமை அறம்?**

தமிழர்களின் வாழ்வியல் நெறியை வகுத்தளித்தது திருக்குறள். திருக்குறள் நமக்கு சமத்துவத்தைக் கற்பிக்கிறது. ஆரியர்களின் வாழ்வியல் நெறியை வகுத்த அளித்தது மனுஸ்மிருதி. அது கற்பிப்பது சனாதனம். திருக்குறளுக்கும் மனுஸ்மிருதிக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ள வேண்டும். ஆரியர்களின் சமூகக் கட்டமைப்பை வரையறுத்து, நான்கு வருணங்களும் கடைபிடிக்க வேண்டிய கடமைகளையும் சனாதன தர்மம் விதிக்கிறது. அது நமக்குரியது அல்ல. ஆரியப் பார்ப்பனர்களின் சனாதன தர்மத்தை இந்தியாவில் உள்ள ஒட்டு மொத்த மக்களுக்கும் நடைமுறைப்படுத்த முயற்சிப்பது ஒரு வேற்றின சர்வாதிகாரம். அதை ஏற்கக் கூடாது.

உதயநிதி ஸ்டாலின் இந்து மதத்தை எதிர்க்கவில்லை . ஆன்மீகத்தை மறுக்கவில்லை. அவருடைய குடும்பத்தார் இறை வழிபாடு செய்வதையும் அவர் மறுக்கவில்லை. ஆனால் பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு நிரந்தரமாகக் கடைபிடிப்பதைத்தான் எதிர்ப்பதாகக் கூறுகிறார். அவர் கூறுவதில் நியாயம் இருக்கிறது!

மேல் வருணமாகிய பார்ப்பன வருணத்தில் பிறந்தவர்கள் சனாதனத்தை வீழ்த்த வேண்டும் என்று பிறர் கூறினால் கொதிக்கிறார்கள்! பல நூறு ஆண்டுகள் பிற மூன்று வர்ணத்தாரின் தோளில் ஏறி உல்லாசமாக உலவிவந்தவர்கள் பார்ப்பனர்கள்.

சனாதன எதிர்ப்பைக் கண்டு அவர்கள் கொதிப்படைவதில் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால் சூத்திரன் என்று பிறவி இழிவைச் சுமப்பவன் ஏன் குமுறுகிறான்? பார்ப்பனர்கள் தங்கள் மேலாதிக்கம் தகர்ந்து விடக்கூடாது என்று கவலைப்படுகிறார்கள். அவர்களுடைய மேலாதிக்கத்தைத் தகர்க்க வேண்டிய சூத்திர வருண மக்கள் ஏன் சனாதன எதிர்ப்பை எதிர்க்கிறார்கள்? அது குறித்த அறியாமை என்பது ஒன்றே காரணம். சனாதன எதிர்ப்பு என்பது ஆன்மீக எதிர்ப்பு அல்ல; சூத்திர-பஞ்சம இழிவு ஒழிப்பு என்பதே அதன் பொருள். இவ்வளவு காலம் சூத்திரர்களாக, பஞ்சமர்களாக இருந்தவர்கள் இதற்கு மேலாவது இந்த பிறவிஇழிவுப் பட்டங்களை தூக்கி எறிந்து, அனைத்து வருணங்களும் சமம் என்ற நிலையை அடைய வேண்டாமா ?

அல்லது சனாதனத்தை முற்றிலுமாக ஒழித்துக் கட்டி, வருணப் பிரிவுகளே இனி இல்லை என்ற நிலையை ஏற்படுத்த வேண்டாமா?

சனாதன தர்மத்துக்கும் நால்வர்ண முறைக்கும் சம்பந்தம் இருக்கிறதா இல்லையா? இருக்கிறது என்பதுதான் பதில். நால் வருண முறை ஏற்றத்தாழ்வை கற்பிக்கிறதா இல்லையா? கற்பிக்கிறது என்பதுதான் பதில். அவ்வாறென்றால் நால்வர்ண முறையை அதாவது சனாதன தர்மத்தை ஏற்பது சரியானதா என்றால், அது சரியானது அல்ல. அது மறுக்கப்பட வேண்டும் என்பதே சரியானது.

நால்வர்ண முறை தங்களை இழிவு செய்கிறது என்று கருதுபவர்கள் அத்தகைய முறை இருக்கக் கூடாது என்று எதிர்ப்பது தவறானதா? எதிர்த்துப் போராடுவதுதான் சரியானது. தீண்டாமை ஆண்டாண்டு காலமாகப் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. அது இந்திய துணைக்கண்டத்தில் சனாதனத்தின் வாழ்வு முறையின் ஒரு கூறு. தமிழ்நாட்டில் சோழர்கள் காலத்திலும் தீண்டாச்சேரி இருந்தது; பெண் அடிமை முறை இருந்தது; தேவரடியார் முறை இருந்தது. அவ்வாறெனில், இப்போது தீண்டாச்சேரி கூடாது என்று பேசுவது சனாதன மறுப்பு அல்லவா? தீண்டாமை கூடாது என்று இந்திய அரசியல் சட்டம் கூறுவது சனாதன மறுப்பு அல்லவா? இனி பெண்கள் அடிமை இல்லை என்று அடிமைத்தனத்தை ஒழிப்பது சனாதன மறுப்பு இல்லையா? எட்டு வயதுக்குள் பெண்களுக்குத் திருமணம் நடந்த முறை சட்டவிரோதம் என்று அறிவித்துக் குறைந்தபட்ச திருமண வயதை நிர்ணயிப்பது சனாதன மறுப்பு அல்லவா? கொத்தடிமைத்தனமும், குழந்தை தொழிலாளிகள் முறையும், குழந்தைத் திருமணமும் முன்பு இருந்தது. அது இந்தச் சமூக வாழ்வியலின் ஒரு கூறாகவே இருந்தது. இப்போது அவை சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டு இருக்கிறது இது சனாதன மறுப்பு அல்லவா?

நாம் சனாதனத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் பெண் கல்வி சாத்தியமாகி இருக்குமா? இன்று கண்ணெதிரே பெண்கள் பல்வேறு வேலைகளுக்குச் செல்ல முடியுமா? ஒரு பெண் காவல்துறையில் பணியாற்ற முடியுமா? சாதாரண ஆசிரியராகக்கூட வந்திருக்க முடியுமா?

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி, சோசியலிசம் ,சம உரிமை பேச்சுரிமை என்றெல்லாம் இந்திய அரசியல் சட்டம் பேசுகிறது. இவை அனைத்தும் சனாதனத்துக்கு எதிரானவை அல்லவா? சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியை மட்டும் தராதே என்று கற்பிக்கப்பட்டு வந்த இந்த நாட்டில், ஆங்கிலேயர்கள் பொதுக்கல்வி முறையை 1835 இல் தொடங்கினார்களே, அது சனாதன எதிர்ப்பு அல்லவா? அவனவன் சாதித்தொழிலைத்தான் செய்ய வேண்டும் என்று விதிக்கப்பட்டு இருந்த நாட்டில், எல்லா சாதிக்காரனும் எல்லா தொழில்களையும் செய்யலாம் என்று நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது! இது சனாதன மறுப்பு அல்லவா? மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்று இருந்ததை, நீதிக்கட்சி காலத்தில் மாற்றி அமைத்து அனைத்துச் சாதியினரும் மருத்துவம் படிக்கலாம்; இனி சமஸ்கிருதம் அறிவு தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டது. இது சனாதன மறுப்பு இல்லையா? சாதிக்கு ஒரு தொழில் என்பதை அடித்து நொறுக்கி, சாதி வரம்பு கடந்து பல்வேறு தொழிலையும் பல்வேறு சாதியினரும் செய்ய உரிமை பெற்றதும், ஒடுக்கப்பட்ட சமூகத்தவரும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தவரும் இன்று அரசு அதிகாரிகளாக வீற்று இருப்பதும் சனாதன மறுப்பு இல்லையா?

**சனாதன மறுப்பில்தான் நம் சமூக விடுதலை அடங்கி இருக்கிறது!**

தந்தை பெரியார் தம் வாழ்நாள் முழுவதும் சனாதனத்தை எதிர்த்துத்தான் போராடினார். சனாதனம் சுமத்திய சூத்திர- பஞ்சமர் பட்டத்தை ஒழித்து விட வேண்டும் என்று தான் போராடினார். அண்ணல் அம்பேத்கர் வாழ்வும் பணியும் சனாதனத்தை அம்பலப்படுத்துவதாகவும், எதிர்த்துப் போராடுவதாகவும் இருந்தது. சனாதனம் மறுத்த உரிமைகளை அண்ணல் அம்பேத்கர் அரசியல் சட்டம் மூலம் உறுதிப்படுத்தினார். அவர்கள் விட்டுச் சென்ற பணி தொடரப்பட வேண்டும். சனாதனம் சுமத்தி இருக்கும் வர்ண பாகுபாடு தகர்க்கப்பட வேண்டும். சட்டப்படியும், சாஸ்திரப்படியும், நாம் இன்னமும் சூத்திரர்களே. உயர்நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் வர்ணாசிரம அடிப்படையில் சூத்திரர்களுக்குக் குறிப்பிட்ட உரிமைகள் கிடையாது என்று பலமுறை தீர்ப்பளித்திருக்கின்றன.

சனாதனம் என்றால் மாறாதது, நித்தியமானது, அழிவற்றது என்று கூறுவதே அறிவியலுக்கும், அறவியலுக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் தடை.

நாம் இன்று வாழும் இந்த வாழ்வு சனாதன மறுப்பினால்தான் கிடைத்தது என்பதை மறந்துவிடக் கூடாது. சனாதனத்திடமிருந்து பறித்தெடுக்க வேண்டிய , சனாதனத்தை அழித்து நாம் பெறவேண்டிய , நிலை நிறுத்த வேண்டிய உரிமைகள் இன்னும் பல இருக்கின்றன. தங்களுடைய ஏகபோகமாக இருந்த வேலை வாய்ப்புகளையும் பதவிகளையும் பொருளாதார நலன்களையும் இன்று கீழ்நிலைச் சாதிகள் எல்லாம் பறித்து பங்கு வைக்கிறார்களே என்ற ஆத்திரம் பார்ப்பனர்களை ஆட்டுகிறது. சனாதனத்தை எதிர்த்துப் பேசினால், அவர்கள் இந்து மதத்திற்கு எதிராகப் பேசுவதாகக் கூறுகிறார்கள்; ஆன்மீகத்துக்கு எதிராகப் பேசுவதாகக் கூறுகிறார்கள். மக்கள் வணங்கும் கடவுளர்களுக்கு எதிராகப் பேசுவதாக கூறுகிறார்கள். உண்மை அதுவல்ல! சனாதனத்தை எதிர்ப்பது என்பது பார்ப்பன ஏகபோகத்தை மறுப்பது என்று பொருள்; உயர்சாதி சர்வாதிகாரத்தை மறுப்பது என்று பொருள். பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பழங்குடி பிரிவினரைச் சேர்ந்த அத்தனை மக்களும் ஓரணியில் அணி திரண்டு சனாதனத்தை எதிர்த்து போர் புரிய வேண்டும். இது காலத்தின் கட்டாயம்!

●

# பெரியார் 36% கருத்தரங்கம் தஞ்சாவூர்

தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம் சார்பில் பெரியார் 36% கருத்தரங்கம் தஞ்சாவூர் பெசன்ட் அரங்கத்தில் 23. 05.2026 அன்று மாலை 3.00 மணிக்குத் தொடங்கி நடைபெற்றது. தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் தலைவர் முனைவர் ஆ. ஜீவானந்தம் தலைமை வகித்தார். இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை மதிவாணன் வரவேற்புரை ஆற்றினார்.

பெருஞ்சித்திரனார் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் தமிழக மக்கள் முன்னணியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பொழிலன் உரையாற்றினார். தமிழ்த் தேசியப் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தங்க குமரவேல் உரையாற்றினார்.

ஆனைமுத்து பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் பேராசிரியர் செயராமன், பிரபாகரன் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் வழக்கறிஞர் பாவெல், குன்றக்குடி அடிகளார் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் சுப்பு மகேசு, வ உ சிதம்பரனார் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் திவிக பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், மறைமலை அடிகள் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் மு. கதிரவன், திரு.வி.க பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் நாகேசுவரன், தோழர் ஜீவா பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் விவேக், பாவாணர் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் அ.சி.சின்னப்பத்தமிழர், காமராசர் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் சு. பழனிராசன், பெண்கள் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் பேராசிரியர் சண்முகப்பிரியா, கம்யூனிஸ்டுகள் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் வழக்கறிஞர் மகாலட்சுமி, சிங்காரவேலர் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் கோ. திருநாவுக்கரசு, பாரதிதாசன் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் வேணுகோபால், பழனிபாபா பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் தௌஃபிக் என்கிற இறை உதவி, அறிஞர் அண்ணா பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் வழக்கறிஞர் அமர்சிங், பார்ப்பனிய பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் பசு கவுதமன், அண்ணல் அம்பேத்கர் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் சிம்ளி விசயன், தோழர் தமிழரசன் பார்வையில் பெரியார் என்னும் தலைப்பில் மொழியமுதன் ஆகிய தோழர்கள் கருத்துரை ஆற்றினார்கள்.

தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத் தோழர் ராச பெரமையன் நன்றி கூறினார். முன்னதாக ஒப்புரவுக் கலைக்குழுவின் தோழர் க.அணன் மற்றும் தென்மொழி பண்ணன் ஈகையரசன் ஆகியோரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் தோழர்கள் மருது குமார்,கவி முருகன், தமிழ்ச்செல்வி, மற்றும் உழைப்போர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் கண்ணன், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் தோழர் இரா. செந்தில்,புரட்சிகர இளைஞர் முன்னணியின் தோழர் அறிவின் ஆதி, புரட்சிகர மக்கள் அதிகார தோழர் மாரிமுத்து,தோழர் அருணாச்சலம் திராவிடர் விடுதலைக் கழக தோழர் திருவேங்கடம், தமிழ் மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் முகிலன்,

சமூக ஆர்வலர் அழகு விமலா, எழுத்தாளர் சாம்பான், மக்கள் அதிகாரம் தோழர் தேவா ஆகியோர் வாழ்த்துரை ஆற்றினார்கள்.

கீழ்க்காணு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

1. தந்தை பெரியாரின் ஈடு இணையற்ற கொள்கையான சமூகநீதி முழுமை பெறவேண்டுமானால் இட ஒதுக்கீட்டு முறை 100% என மாற்றி அமைக்கப்பட வேண்டும். பார்ப்பனர்களுக்கு 3% இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். பொதுப் போட்டி முறை ஒழிக்கப்பட வேண்டும். சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களைச் "சாதியற்றோர்" பட்டியலை உருவாக்கி அதில் இணைத்து அவர்களுக்கு 10% இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இது பெரியாரின் சமூகநீதிக் கொள்கையை முழுமைப் படுத்துவதாகும். இதற்கான சட்ட முன் வரைவைத் தமிழ்நாட்டை ஆளும் தவெக அரசு கொண்டு வர வேண்டும். தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம் முன்னெடுக்கும் சமூகநீதியின் முழுமைக்கான தொடர் போராட்டங்களுக்குத் திராவிடர் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், திராவிடர் பெரியார் கழகம், அம்பேத்கரின் இயக்கங்கள், புரட்சிகர மார்க்சிய - லெனினிய இயக்கங்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும் என இக்கருத்தரங்கம் கேட்டுக்கொள்கிறது.

2. தந்தை பெரியாரின் பிறந்த நாளான செப்டம்பர் 17 ஐ "சமூக நீதி நாளாக* அறிவித்துப் பொது விடுமுறை அறிவிக்க சட்டம் இயற்றுமாறு பெரியாரைக் கொள்கைத் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ள தமிழ்நாட்டை ஆளும் தவெக அரசை இக்கருத்தரங்கம் வலியுறுத்துகிறது.

3. இட ஒதுக்கீட்டு வரலாற்றை ஆறாம் வகுப்பில் இருந்து 12 ஆம் வகுப்பு வரை பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் எனத் தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் ஆகியோரை இக்கருத்தரங்கம் கேட்டுக்கொள்கிறது.

4. 1990களில் உலகமயமாக்கல் நடத்தப்பட்ட பிறகு தொண்டு நிறுவனங்களால் இயக்கப்படும் சில தலித் அமைப்புகள் அம்பேத்கரே போதும் என்றும் பெரியார் தேவையில்லை என்றும் பரப்புரை செய்கின்றன." நான் வட இந்தியாவில் செய்யும் பணியைப் பெரியார் தென்னிந்தியாவில் செய்கிறார்" என்று அம்பேத்கரே கூறிவிட்ட




பிறகும் " அம்பேத்கர்தான் என் தலைவர்" என்று பெரியாரே கூறிவிட்ட பிறகும் இந்தக் குழப்பவாத இயக்கங்கள் நாணயத்தின் இரு பக்கங்களான பெரியாரையும் அம்பேத்கரையும் பிரித்தாளும் சூழ்ச்சியைச் செய்து வருவதையும் அதனால் தலித் விடுதலை தள்ளிப் போடப்படுவதையும் தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம் மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தும் எனக் கருத்தரங்கம் சூளுரைக்கிறது.

5. தமிழ்த் தேசியம் என்னும் பெயரில் இனவாதம் பேசித் திரியும் சில இயக்கங்கள் பெரியாரைப் புறந்தள்ளிவிட்டு ஒரு தமிழ்த் தேசியத்தைக் கட்டமைக்க முயல்கின்றன . "சாதி ஒழிப்பும் தனித்தமிழ் நாடும் என் உயிரினும் மேலான இரு கொள்கைகள்" எனவும் "தமிழ்நாடு தமிழருக்கே" எனவும் "தமிழா! இன உணர்வு கொள்" எனவும் " சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி" எனவும் முழக்கங்களை முன்வைத்துத் தமிழினம் பகுத்தறிவுள்ள சுதந்தரமான இனமாகத் தனித்தமிழ் நாட்டில் வாழ இறக்கும் வரை ஓயாது பாடுபட்ட தந்தை பெரியாரை, பிறப்பால் கன்னடர் என்று கூறிப் புறக்கணிப்பது மனுதர்மவாதமே தவிர வேறு இல்லை. இத்தகைய போலித் தமிழ்த் தேசிய இயக்கங்களின் பொய்ப் பரப்புரைகளை உடைத்தெறிந்து உண்மையான தமிழ்த் தேசியத்தை நிலைநாட்டவே தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம் பெரியார் 360% என்னும் இக்கருத்தரங்கத்தை நடத்துகிறது. இக்கருத்தரங்கில் இடம்பெறும் கருத்துரைகளின் கட்டுரை வடிவங்கள் பெரியார் 360% என்னும் பெயரில் நூலாக வெளியிடப்படும் என்றும் அதன் மீதான திறனாய்வுக் கூட்டங்கள் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படும் என்பதையும் அறிவிக்கிறோம். எமது தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கத்தின் இந்த முன்னெடுப்புக்குத் தமிழக மக்கள் முன்னணி, பெரியாரிய இயக்கங்கள், அம்பேத்கரிய இயக்கங்கள், புரட்சிகர மார்க்சிய - லெனினிய இயக்கங்கள் தங்களது ஒத்துழைப்பை நல்குமாறு இக்கருத்தரங்கம் கேட்டுக்கொள்கிறது.

6. சில கம்யூனிச இயக்கங்கள் நீங்கள் கம்யூனிஸ்டுகளாக இருந்து கொண்டு பெரியாரை ஏன் தூக்கிப் பிடிக்கிறீர்கள் என்றும் அதைப் பெரியார் இயவாதிகள் செய்யட்டுமே என்றும் கேட்கின்றனர். அந்த இயக்கங்களுக்கு நாம் சொல்லிக் கொள்ள விழைவது என்னவென்றால், கார்ல் மார்க்ஸ் அவர்கள் ஹெகல் அவர்களின் கோட்பாடுகளைப் புறந்தள்ளாமல் சில விமர்சனங்களை வைத்து ஏற்புடையனவற்றை ஏற்றுக்கொண்டுதான் மார்க்சியத்தை வடிவமைத்தார். இந்தியாவின் சிறப்புக் கூறான சாதியைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் மேல் கட்டுமானங்களான மதம், புராணம், இதிகாசம், சாத்திரம், சடங்கு, கடவுள் ஆகியவற்றின் மீதான கடும் தாக்குதலைப் பெரியார் தொடுத்தார். இந்தியக் கம்யூனிஸ்டுகள் செய்யத் தவறிய இந்தப் பணியை இட்டு நிரப்பியவர் பெரியார் ஒருவரே. இம்மானுவேல் கான்ட் அவர்களின் கோட்பாட்டின் படிதான் தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம் பெரியாரைத் தூக்கிப் பிடிக்கிறது. பெரியாரையும் அம்பேத்கரையும் புறந்தள்ளிவிட்டு இங்கு கம்யூனிசம் பேசுவது கவைக்கு உதவாது என்பதை இந்தக் கருத்தரங்கம் ஆணித்தரமாகப் பதிவு செய்கிறது.

7. அனைத்துத் தொழில்நுட்ப வசதிகளையும் கைபேசியில் அடக்கி வைத்திருக்கும் இளைய தலைமுறையே! இக்கருத்தரங்கம் உன்னை நோக்கித் தான் வைக்கப்படுகிறது! தமிழ்த் தேசியம் என்னும் பெயரிலோ கம்யூனிசம் என்னும் பெயரிலோ சாதியின் பெயரிலோ உன்னை அணிதிரட்ட அணுகும் கூட்டம் உண்மையானதா போலியானதா என்று அறியும் உரைகல் பெரியாரே ஆவார். எனவே, இளைய சமுதாயமே பெரியார் கொள்கைகளைத் தேடிப் படி! அதுதான் உன்னை உயர்த்தும் ஏணிப்படி!

# திருவள்ளுவரை விழுங்கிட, தமிழை, தமிழின் சிறப்பை அழித்திட ஆரியப் பார்ப்பனியம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது...

**அண்மைக்காலமாக ஆர் எஸ் எஸ் செய்து வருகிற அம் முயற்சிகளை முறியடித்தாக வேண்டும்..**

**பொழிலன்**
தமிழக மக்கள் முன்னணி

தமிழ்நாட்டின் கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலையைத் தமிழ்நாட்டுத் தமிழர்களைச் சென்று பார்க்க விடாதபடி ஆர். எஸ். எஸ். இன் விவேகானந்தா கேந்திரா தொடர்ந்து தடை செய்து வந்தது.. படகுகளை அப்போது திருவள்ளுவர் சிலைக்கே அனுப்ப மறுத்தனர்..

திருவள்ளுவர் சிலை பாறைக்கும், விவேகானந்தர் மண்டபம் உள்ள பாறைக்கும் இடையில் கண்ணாடிப் பாலம் புதியதாக அமைக்கப்பட்ட பிறகு படகுக்கான கட்டணம் உரு. 100 வாங்கப் பெறுவதோடு அந்தப் பாலத்தில் செல்வதற்கு ஒவ்வொருவரிடமும் 30 உருபா வேண்டுமென விவேகானந்தா கேந்திரம் தனியாக வழிப்பறிக் கொள்ளையடிக்கிறது..

**கன்னியாகுமரியிலும் திருவள்ளுவர் சிலையிலும் அதிகாரங்களை இழந்து வருகிறது தமிழ்நாடு அரசு..**

இந்நிலையில் நீண்ட காலமாகக் கன்னியா குமரியையும் திருவள்ளுவரையும் விழுங்குவதற்கு ஆர்.எஸ்.எஸ். செய்து வருகிற முயற்சிகள் குறித்துச் சிலவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்..

**ஆர். எஸ். எஸ். தமிழ்நாட்டில் வளர்வதற்குக் கன்னியாகுமரி ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது?**

1925 இல் ஆர்.எஸ்.எஸ். தொடங்கப்பட்டு நெடுங்காலம் வரை தமிழ்நாட்டிற்குள் அது நுழைய முடியாத சூழலே இருந்தது. 1939-இல் பதினைந்துக்கும் மேற்பட்ட சித்பவன் பிராமணர்கள் தமிழ்நாட்டிற்குள் அனுப்பப்பட்டிருந்த நிலையிலும் அவர்கள் ஆரிய சமாஜம் உள்ளிட்ட தொடர்புடைய வழக்கறிஞர்கள் சிலரைத் தொடர்பு கொண்டு அந்த இயக்கத்தை அமைக்க முடிந்ததே அல்லாமல், ஆர்.எஸ்.எஸ்.-ஐ மக்கள் இயக்கமாக வளர்க்க முடியவில்லை.

1940 மார்ச்சு 23-இல் சாவர்க்கர் சேலத்தில் இந்து மகாசபை மாநாட்டை அங்குள்ள பார்ப்பன - மார்வாடி - சௌராட்டிரர் தொடர்பில் நடத்தத் திட்டமிட்டார். கூட்டமில்லாமலே மாநாடு நடந்தது. தொடர்ந்து மார்ச்சு 26-இல் சென்னையில் மராட்டிய சிவாஜி விழாவில் கலந்துகொண்டு பேசியதும், அந்த நான்கைந்து நாள்களாகத் தமிழ்நாட்டிலேயே அவர் தங்கியிருந்ததும் கவனத்திற்குரியவை.

1942-க்கு முன்பாக இந்தியாவில் வங்காளம், அசாம், ஒரிசா, தமிழ்நாடு ஆகிய பகுதிகளுக்குள் ஆர்.எஸ்.எஸ். நுழைய முடியவில்லை என ஆர்.எஸ்.எஸ். இன் குறிப்பேடு சொல்லுகிறது.

1948 சனவரி 30 ஆம் நாள் காந்தி கொலை செய்யப்பட்ட அன்று இரவு கோல்வால்கர் சென்னையில் தேநீர் விருந்து ஒன்றில் கலந்து கொண்டிருந்ததாகவும், அன்று மாலை தேநீர் குடித்துக் கொண்டிருந்தபோது காந்தி கொலை செய்யப்பட்ட செய்தி அவருக்குத் தெரிந்ததாகவும் கோல்வால்கரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூலில் குறிக்கப்பட்டுள்ளது.

1948-க்கு முன்பும் 1949-களிலும்கூட ஆர்எஸ்எஸ் தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் கோல்வால்கர் சென்னைக்கு அடிக்கடி வந்து போயிருக்கிறாராம், விசுவ இந்து பரிஷத்தின் கலந்தாய்வுக் கூட்டங்களுக்கு அவர் வந்து சென்றதாகப் பதிவு உள்ளது.

1956-இல் மதுரைக்குக் கோல்வால்கர் வந்ததாகவும் அங்குப் பசும்பொன் முத்துராமலிங்கரைச் சந்தித்ததாகவும் விடப்பட்ட கதை முக்குலத்தோரை ஆர்.எஸ்.எஸ். இன் ஆதரவாக்கும் நோக்கத்திற் கானதே தவிர, கோல்வால்கர் 1956-இல் பசும்பொன் முத்துராமலிங்கரைச் சந்திக்கவில்லை என்பதும், 1959-இல் தான் அவர் வந்ததாகவும் அறியமுடிகிறது.

தமிழ்நாட்டில் பிராமணர்களை, சௌராட்டிரர்களை, மார்வாடிகளைக் கொண்டே தொடக்கத்தில் ஆர்.எஸ்.எஸ்.-சும், அதன் அமைப்புகளும் உருவாக்கப்பட்டன. விவேகானந்தர் நூற்றாண்டினையொட்டித் தமிழ்நாட்டிற்குள் ஊடுருவிக் காலூன்றிட வேண்டும் எனத் திட்டம் விரிவாகப் போடப்பட்டிருந்தது..

1962-இல் கன்னியாகுமரியில் விவேகானந்த கேந்திரம் எனும் நிறுவனம் ஒன்றை நிறுவிடவும், கன்னியாகுமரி கடற்கரையில் இருக்கும் பெரிய பாறையில், 1892 நவம்பர் 25, 26, 27 ஆகிய மூன்று நாள்களில் விவேகானந்தர் ஊழ்கம் (தியானம்) செய்ததாகவும் சொல்லி (அவ்வாறு அவர் அந்தப் பாறையில் மூன்று நாட்கள் இருந்தது என்பதும், அந்தக் காலமும் இடமும் எந்த அளவு உண்மையானது என்பதும் எங்கும் பதிவில் இல்லை.. ஆர்.எஸ். எஸ். இதழில்தான் பிற்காலத்தில் எழுதியுள்ளனர்.) அந்தப் பாறையில் விவேகானந்தர் மண்டபம் அமைக்க விவேகானந்தா கேந்திரத்தின் மூலம் பெரும் முயற்சி எடுத்தனர்.

ஆர்.எஸ்.எஸ். மூத்தத் தலைவர்களில் ஒருவரான ஏக்நாத் இரானடேவை அங்கு முன்னிறுத்தி அதற்கான முயற்சிகளைச் செய்தனர்.

அதற்கு முன்னர், அந்தப் பாறையைக் கன்னியாகுமரி மீனவர்கள் தொடர்ந்து பயன்படுத்தி வந்தனர். அவர்கள் அனைவரும் அக்காலத்தில் கிறித்தவர்களாக இருந்ததால் கிறித்துமசு காலங்களில் குறுந்தட்டி வழிபாடும் செய்து வந்தனர். மீன் பிடி வலைகளை உலர வைக்கப் பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் அந்தப் பாறையை விட்டுத்தர அவர்கள் மறுத்துப் பெரிய அளவில் போராடவே முதலில் அப்போதைய தமிழக முதல்வர் காமராசரிடமும், பிறகு பக்தவச்சலம் முதலமைச் சராக இருந்தபோது அவரையும் சந்தித்து இசைவு கேட்க அவர்கள் "தாங்கள் செய்ய இயலாது" எனச் சொல்லி மறுத்துவிடவே, இரானடே அப்போதிருந்த இந்திய அரசின் கல்வி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் உமாயூன் கபீர்-ஐச் சந்தித்தபோது, அவர் அதற்கு "இது வீணாகக் கிறித்தவர்களிடையே முரண் உணர்வை உருவாக்கிவிடும், அது மட்டுமன்றி கடலின் இயற்கை அழகைக் கெடுத்துவிடும்" என்றும், "இதில் இந்திய அரசு தலையிட முடியாது" என்றும் "மாநில அரசை நீங்கள் அணுக வேண்டும்" என்றும் கூறியிருக்கிறார்.

உடனே, இரானடே குடியரசுத்தலைவர் இராதாகிருட்டிணனையும், அமைச்சர்கள் இலால்பகதூர் சாஸ்திரி, பட்டேல் மற்றும் சங்கராச்சாரி, இராமகிருஷ்ண மிசன் தலைவர் சுக்லா என அனைவரையும் சந்தித்திருக்கிறார். இலால் பகதூர் சாஸ்திரி நேருவிடம் தெரிவித்து இசைவு பெறுவதாகக் கூறினார்.

இதற்கிடையில் மேற்குவங்க முதல்வர், கேரள முதல்வர் மற்றும் 323 நாடாளுமன்ற உறுப்பினர்களின் இசைவுக் கையொப்பங்களை யெல்லாம் பெற்று இறுதியாக நேருவின் பரிந்துரையையும் பெற்றுத் தமிழக முதல்வர் பக்தவச்சலத்தை மீண்டும் சந்தித்தார் இரானடே.

பின்னர், தமிழக அரசின் இசைவை 1964 செப்டம்பர் 24-இல் பெற்றார்.

வேடிக்கை என்னவென்றால் அதற்கான அமைப்புக் குழுவின் சிறப்புத் தலைவ ராகப் பக்தவச்ச லமே அமர்த்தப் பட்டதுடன், எதிர்க்கட்சித் தலைவர் அண்ணாத் துரையின் இசைவில்



நெடுஞ்செழியனும் குழு உறுப்பினராக ஆக்கப்பட்டிருந்தார். பிற தலைவர்களும் அதில் உறுப்பினர்களாக்கப்பட்டனர். ம.பொ.சி.-யும் பிற தலைவர்களும் உறுப்பினர்களாயினர் - என ஆர். எஸ். எஸ். இன் இதழான 'ஆர்கனைச'ரில் செய்தி பதிவாகியிருக்கிறது.

அதன்வழி, அரசியல் கட்சிகளின் எதிர்ப்பு இல்லாத நிலையில் கேரள அரம்பர்(ரௌடி)களையும் கட்டுமானப் பணியாளர்கள் கொண்ட குழுவினரையும் வைத்துக்கொண்டு மண்டபம் கட்டத் தொடங்கினர்.

கேரள முதல்வர் நம்பூதிரிபாட்டின் வழிகாட்டலில் அச்சுத மேனன் குழுவிற்குத் துணை செய்தார், தமிழ் நாட்டில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சிச் சார்பில் கல்யாணசுந்தரமும், மேற்கு வங்கத் துணைமுதல்வர் ஜோதிபாசுவும் பெருமளவில் இரானடே-வுக்குத் துணை நின்றனர்.

ஆக, தமிழ்நாட்டில் விவேகானந்தர் கேந்திரா எனும் பெயரில் கன்னியாகுமரி பாறையைப் பறித்துக் கொண்டு விவேகானந்தர் பாறையாக மாற்றுவதற்கான ஆர்.எஸ்.எஸ். - இன் முயற்சிக்கு ஏறத்தாழ எல்லாக் கட்சியினரும் எந்த எந்த அளவு பின்னிருந்து செயல்பட்டனர் என்பதையும் கன்னியாகுமரியைத் தாரை வார்த்து வாங்குவதற்கு ஒவ்வொருவரையும் எந்த அளவு ஈடுபடுத்தினர் என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு அந்தக் கேந்திரத்தின் தலைவரும் செயலாளரும் பரமேசுவரன், ஏ. பாலகிருஷ்ணன் என்கிற கேரளத்தைச் சேர்ந்தவர்கள் என்பது ஒருபக்கம் எனில், கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரம் மூலம் *75* கல்விக்கூடங்களும் (அந்தமானில் *9*, தமிழ்நாட்டில் *3*, அசாமில் *18*, அருணாசலப் பிரதேசத்தில் *35*) மருத்துவமனைகளும் நடைபெற்று வருகின்றன என்பதும் அறிய வேண்டிய செய்தியாகிறது. விவேகானந்தா கேந்திராவின் பெயரில் பல மொழிகளில் சிறு வெளியீடுகள் அங்கு வருவோர் போவோர் அனைவருக்கும் கொடுக்கப் படுகின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாகக் கேந்திரத்தின் முழு ஆதரவில் ஆந்திரத்தின் திருப்பதிக் கோயிலும், *2017*-இல் பாரத மாதா கோயிலும், இராமாயண (தரிசன)க் காட்சிக் கூடமும், அனுமன் சிலையும், சிவன் சிலை கொண்ட நுழைவாயிலும் கட்ட *25* கோடி என இந்தியப் பாசிச அரசின் மோடி (யார் அப்பன் வீட்டுச் சொத்து!) செலவிற்குக் கொடுத்துள்ள நிலையில் அவை கட்டப்பட்டுத் திறக்கப்பட்டன.



அரித்துவாரில் நிறுவப்படாமல் கிடத்தப்பட்டிருந்த திருவள்ளுவர் சிலை

ஆக, அவ்வகையில் ஆர்.எஸ்.எஸ்.-இன் கோட்டையாகச் செயல்பட்டு வரும் நிலையில் தமிழ்நாட்டின் முதற் பெரும் இடமாகக் கன்னியாகுமரியில் வலுவாகக் கால்பரப்பியுள்ளது.

**அதன் தொடர்ச்சியாக அது செய்த, செய்து வருகிற வேலைகள் பல...**

*1970*-இல் விவேகானந்தர் பாறை திறக்கப்பட்ட தன்பின் திருவள்ளுவர் சிலையையும் தாங்களே நிறுவ இருப்பதாக அறிவிப்பு செய்துகொண்டனர்..


அதனால், அன்றைய சூழலில் தமிழ்நாட்டு அரசின் பொறுப்பிலும் விவேகானந்த கேந்திரப் பொறுப் பிலுமே சிலையைத் திறப்பதாக திட்டம் உருவாக்கப்பட்டது..

தமிழ்நாடு அரசு தனித்துத் திறந்துவிடாதபடி பல தகிடுதத்தப் பணிகளை ஆர்.எஸ்.எஸ். தொடர்ந்து செய்தது.

"என் உயிர் இருக்கிறவரை விவேகானந்தர் கேந்திரா இணைப்பில்லாமல் தனித்துத் திருவள்ளுவர் சிலையை நிறுவுவதற்கு நான் துணை செய்ய மாட்டேன்" என எம்ஜிஆர் தன்னைச் சந்திக்க வந்த விவேகானந்தர் கேந்திரத்தினரிடம் (ஆர்எஸ்எஸ்-சினரிடம்) ஒப்புதல் கொடுத்ததாகச் சொல்லப் பெறும் வாக்குறுதியைத் தன் மறைவுக் காலம் வரை காப்பாற்றிக் கொண்டார்.

அந்த வகையில் *1979* ஏப்பிரல் *15* இல் கால்கோள் விழா நடைபெறுவதாகவும், அறிக்கை உருவாக்கப்பட்டு வேலைகள் நடந்தன. அந்த நிகழ்ச்சிகளிலெல்லாம் விவேகானந்தர் கேந்திரமும் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டது.

ஆனால், அதன் பிறகு, திருவள்ளுவர் சிலையைத் தமிழ்நாடு அரசு தம் பொறுப்பில் மட்டுமே பொறுப்பெடுத்து நிறுவுவதற்கு அருமுயற்சி செய்ய வேண்டி இருந்தது. விவேகானந்தா கேந்திரத்தை அதிலிருந்து விலக்கிவிடும் பணியைக் கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபொழுது பெருமுயற்சி எடுத்து நிறைவேற்றினார். அவ்வகையில் திருவள்ளுவர் சிலை முழுக்க முழுக்கத் தமிழ்நாடு அரசின் பொறுப்பில் *1990* செப்டம்பர் ஆறாம் நாள் தொடங்கப்பட்டு, ஏறத்தாழ *7000* கல்லெடை(டன்) எடையில் முழுக்க முழுக்கப் பாறைக் கற்களால் திரு. கணபதி பெருந்தச்சரின் பொறுப்பில் ஏறத்தாழ ஒன்பது ஆண்டுகள் பணிகள் நடைபெற்று கட்டமைக்கப் பட்டது.




தி.பி. *2000* சுனவரி *1* ஆம் நாள் மிகப்பெரும் முயற்சிகளுக்குப் பிறகு திறக்கப்பட்ட பின், அதனைப் பெருமை இழக்கச் செய்வதிலும் அதன் ஆளுமைப் பணிகளில் தாங்களும் இணைந்து கவனிப்பதாய் அதை அழிக்கத் திட்டமிடுகிற முயற்சியிலும் ஆர்.எஸ்.எஸ். தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

**திருவள்ளுவர் சிலை சிறப்புபெறாத வகையில் விவேகானந்தர் கேந்திரம் செய்கின்ற சூழ்ச்சிகள்:**

மிகக் கடுமையான முனைப்பில் திறக்கப்பெற்ற திருவள்ளுவர் சிலையை எப்படியாவது தங்களின் அதிகாரத்திற்குள் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதற்காகப் பல வேலைகளைச் செய்து வருகிறது விவேகானந்தர் கேந்திரம்.

*2000* ஆண்டில் திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்ட பிறகு ஒரு சில ஆண்டுகளே தமிழ்நாட்டு அரசின் பூம்புகார் போக்குவரத்துக் கழகத்தினால் செலுத்தப்படும் படகுகள் திருவள்ளுவர் சிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தன..

இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு சிலைக்குப் படகு போக சரியான வகையில் சூழல் இல்லை.. நீர் அளவு குறைவாக இருக்கிறது, காற்று கடுமையாக இருக்கிறது, பாறைகள் மேலே தெரிகின்றன

என்கிற வகையில் ஏதாவது காரணம் சொல்லித் திருவள்ளுவர் சிலைக்குப் படகு போக்குவரத்தை நிறுத்தினார்கள்..

கலைஞர் கருணாநிதியால் திறக்கப்பட்டது என்பதற்காக, பின்னர் முதலமைச்சராக வந்த செயலலிதா உள்ளிட்டவர்கள் அந்தச் சிலையைத் தூய்மைப்படுத்தாமலும் பூச்சு பூசிப் பேணிக் காக்காமலும் அப்படியே கிடப்பில் போட்டனர்..

அதனால், ஏறத்தாழ பத்துப் பதினைந்து ஆண்டுகள் அளவில் திருவள்ளுவர் சிலைக்கான போக்குவரத்து இல்லாமலேயே போய்விட்டது..

இறுதியாகக் கடந்த ஆட்சியின் போதுதான் திருவள்ளுவர் சிலையைப் போய்ப் பார்ப்பதற்கான கோரிக்கை வலுப்படவே விவேகானந்தர் மண்டபம் உள்ள பாறைக்கும் திருவள்ளுவர் சிலை பாறைக்கும் இடையில் கண்ணாடிப் பாலம் ஒன்றை திபி 2024 திசம்பர் 31 அன்று தமிழ்நாடு அரசின் முதமைச்சர் மு. க. ஸ்டாலின் அமைத்துத் திறந்து வைத்தார்..

ஆனால், அப்போது அதாவது கண்ணாடி இழைப்பாலப் பணிகள் நடந்து கொண்டிருந்த 2023 ஆம் ஆண்டில், திருக்குறள் பேரவையத்தின் ஒருங்கிணைப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட திருக்குறள் அமைப்புகள் எல்லாம் இணைந்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு கண்ணாடிப் பாலத்தைக் கடற்கரையில் இருந்து நேராக திருவள்ளுவர் சிலை நோக்கி அமைக்கலாம் என்று வலியுறுத்தப்பட்டது. விவேகானந்தர் மண்டபம் உள்ள பாறை வழியாகப் போய்ப் பார்ப்பதால் திருவள்ளுவர் சிலையின் முழு கட்டுப்பாட்டையும் அந்த மண்டபத்தைச் சார்ந்த விவேகானந்தா கேந்திராவினரின் ஆளுகைக்கே செல்ல நேரிடும் என அறிவுறுத்தப்பட்டது..

ஆயினும், அன்றைய அமைச்சர் எ. வா. வேலு அக்கருத்தைச் செவி சாய்க்காமல், அந்த இரண்டு பாறைகளுக்கும் இடைப்பட்டே கண்ணாடிப் பாலத்தைக் கட்டமைத்து விவேகானந்தா கேந்திராவின் அதிகாரமே தாண்டவம் ஆடுகிற படி அமைத்து விட்டார்.. இது ஆர். எஸ். எஸ். க்கு மிகவும் வாய்ப்பாகப் போய்விட்டது.

ஏற்கனவே,

திருவள்ளுவருக்கு என்ன உடை உடுத்துவது எப்படி அடையாளப்படுத்துவது என்று அதிகார வெறிபிடித்து ஆடுகின்றனர் ஆளுநர்கள்... வைதீக சனாதன உணர்வை பரப்பி வருகின்றனர்..

திருவள்ளுவரை ஆய்வு செய்கிற அறிஞர்கள் அல்லர் ஆளுநர்கள்..

வந்தேறி ஆளுநர்களின் மூளைக்குள் என்ன பதிவு செய்யப்பட்டு அவர்கள் அனுப்பப்படுகிறார்களோ.. அந்தப் பதிவுகளைத்தாம் அவர்கள் இங்கு வந்து கக்குகிறார்கள்..

அதேபோல், பாரதிய ஜனதா கட்சி உள்ளிட்ட வைதீக சனாதனக் கருத்துடைய கட்சிகள் இயக்கங்கள் எல்லாம் தமிழ் இலக்கியங்களிலோ, திருக்குறளிலோ புலமைப் பெற்ற கட்சிகள் அல்ல..

அவர்களின் வைதீக சனாதன அரசியலைப் பரப்பல் செய்வதற்காகவும் மக்கள் தலையில் திணிப்பதற் காகவும் திருவள்ளுவரை ஒரு கருவியாக இன்னும் சொன்னால் காவி பூசப்பட்ட கருவியாகவே மாற்றப் பார்க்கிறார்கள்..

அதற்காக நீண்ட நெடிய திட்டமுடையவர்களாக அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்..

தருண்விஜய் என்ற பாரதிய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கன்னியாகுமரிக்கு வந்து அங்கிருந்து ஒரு திருவள்ளுவர் சிலையை எடுத்துக்கொண்டு போய்க் கங்கைக் கரையில் உள்ள ஹரிதுவாரில் பெரிய அளவில் நிறுவப்போவதாகச் சொல்லி எடுத்துச் சென்றவர், அங்குக் கொண்டு போன திருவள்ளுவர் சிலையைச் சாக்குப்பைக்குள் திணித்துச் சகதியில் வீசி எறிந்து இழிவு படுத்தியதைத் தமிழகம் மறந்து விடாது..

அந்த நிகழ்ச்சி தொடங்கி, ஊரெல்லாம் போய்த் திருவள்ளுவரைப் பேசித் தங்களின் வைதீகக் காவிச் சகதிக்குள் தன்வயப்படுத்தி அடைத்து அடையாளப்படுத்திக் கொள்வதற்காக மோடி செய்து வருகிற வித்தைகள் வரை..

அவர்களின் நோக்கங்கள் எல்லாம் திருவள்ளுவ அறத்தை எப்படியாவது வைதீக சனாதனத்துக்குள் கரைத்து விட வேண்டும் என்பதே..

எனவே, அவர்கள் திருவள்ளுவரைக் காவிக்குள் கரைக்கப் பார்க்கின்றனர்..

ஆனால், திருவள்ளுவம் பொதுமை அற உணர்வு கொண்டதே என்பதை அடையாளப்படுத்துகிற பொறுப்பு நம்முடையது..

எனவே, அதைச் சிதைக்கிற வைதீக சனாதனத்தைத் திருவள்ளுவம் ஏற்க முடியாது..

தமிழர்களின் திருவள்ளுவத்தைக் காவிப்படுத்துவ தற்கோ, வைதீகசனாதனப் புதைச்சேற்றுக்குள் புதைப்பதற்கோ அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது..

எனவேதான்.. தமிழ்நாடு.. வைதீக சனாதனத்தை வெறித்தனமாகப் பிடித்துக் கொண்டிருக்கிற ஆரியப் பார்ப்பனியத்தை எதிர்க்க வேண்டியிருக்கிறது.. பகைக்க வேண்டியிருக்கிறது..

திருவள்ளுவ அறத்தைக் கொண்டு அவர்களை இடித்துரைக்க வேண்டியிருக்கிறது..

இந்நிலையில்..

திருவள்ளுவர் அமைப்புகள் ஒன்று கூடி, கன்னியா குமரி மாவட்டத்தில் உடனடியாகச் செய்ய வேண்டிய வேலைகளாக இவற்றை முன் வைக்கின்றன.:

**கன்னியாகுமரியின் திருவள்ளுவர் சிலைக்கான வழியைத் தமிழ்நாட்டரசின் பொறுப்புக்கே உரிமையுடையதாக மாற்ற வலியுறுத்துவோம்!**

**இப்போதுள்ள கண்ணாடிப் பாலத்தைப் பாதுகாப்பதற்கான செலவைத் தமிழக அரசே ஏற்றுக் கொள்வதோடு அதன் வழியான வரவையும் தமிழ்நாடு அரசே பெற வேண்டும். அதாவது படகு போக்குவரத்துக்காக வாங்கப்படுகிற சீட்டுத் தொகையைக்கொண்டே கண்ணாடிப் பாலத்தையும் பர்ர்க்கிறபடி செய்யவேண்டும். விவேகானந்தா நிறுவனம் தனியே 30 உருவா வழிப்பறிச் செய்வதைத் தடை செய்ய வேண்டும்.**

**கடற்கரையில் இருந்து தனியே திருவள்ளுவர் சிலைக்குப் போக புதிய பாலம் ஒன்றை அமைக்க வேண்டும். அதுவரை திருவள்ளுவர் சிலைக்குத் தனியே படகு அனுப்புகிற நடைமுறையை மேற்கொள்ளவேண்டும்!**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் எங்கு திரும்பினாலும் திருவள்ளுவரை அடையாளப் படுத்துகிற வகையில் ஒவ்வொரு சாலையிலும் திருவள்ளுவர் சிலைகளை எழுப்புவதுடன் திருக்குறளை முதன்மைப்படுத்திப் பரப்பல் செய்வேண்டும்..**

**திருவள்ளுவர் குறித்துப் பல்வேறு மொழிகளில் குறுவெளியீடுகளைத் தமிழக அரசு வெளியிட்டு, சுற்றுலா வருவோர்க்கு அதை இலவயமாக வழங்க வேண்டும்.**

**அங்குத் திருவள்ளுவர் குறித்த ஒலி, ஒளிக் காட்சி காட்டப்படுகிற வகையில் அங்கு நிறுவப்பட வேண்டும்.**

**திருவள்ளுவர் குறித்த நூல்களைக் குறைந்த விலையில் தமிழக அரசே அங்கு விற்பனை செய்ய வேண்டும்.**

**விவேகானந்தர் மண்டபம் உள்ள பாறையின் முழுக் கட்டுப்பாட்டையும் தமிழக அரசே பொறுப்பெடுத்து நடத்த வேண்டும்.**

**- என்கிற வகையில் தமிழ்நாடு அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்..**

# விஜய் ஆட்சியில் திணிக்கப்படும் இந்துத்துவத் திட்டங்கள்

● க. இரா. தமிழரசன்,
தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம்

ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டிருக்கும் பாலியல் வன்முறைகள், கொலைகள் நம் நெஞ்சத்தை உருக்குலையச் செய்கின்றன, சட்டம் ஒழுங்கு சீரழிவு, மின்வெட்டு, தண்ணீர் பற்றாக்குறை போன்ற நிர்வாகப் பிரச்சனைகள் உழைக்கும் மக்களைக் கடுமையாகப் பாதிக்கின்றன. இது குறித்து முற்போக்கு இயக்கத் தோழர்கள் கூடுதலாகக் கவனம் செலுத்தித் தமது கண்டனத்தைப் பதிவு செய்கின்றனர், கண்டிக்கின்றனர்.

எல்லாத் தொலைக்காட்சிகளும் மேற்கண்ட பிரச்சனைகளைத்தான் பெரிதுபடுத்திப் பேசுகின்றன. கடந்த திமுக ஆட்சியிலும் மேற்கண்ட நிகழ்வுகள் நடந்து கொண்டுதான் இருந்தன. ஆனால், விழுக்காடு அடிப்படையில் தற்போது கூடுதலாக நடக்கிறது அவ்வளவுதான். சன் டிவி, கலைஞர் டிவி உள்ளிட்டவை இதுகுறித்து அடிக்கடி செய்தி போடுகின்றனர். விஜய்க்கு எதிராக ஒரு பிம்பத்தைக் கட்டமைக்க அவர்கள் விரும்புகின்றனர். திமுகவுக்கு வேண்டுமானால் ஆட்சியை இழந்த சோகம் இருக்கலாம், மீண்டும் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்று வெறி இருக்கலாம், நமக்கு அப்படி இருக்கத் தேவையில்லை.

அவர்களது ஆதரவு ஊடகங்கள் பெரிது படுத்துவதை மட்டும் நாமும் பின்பற்றி அது குறித்து மட்டும் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை. நாம் நிர்வாகப் பிரச்சினைகள் குறித்து பேசிக் கொண்டிருக்கும் போது சத்தமில்லாமல் விஜய் ஆட்சியில் இந்துத்துவத்திற்கு ஆதரவான செயல்பாடுகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. அவை பெரிய அளவில் எதிர்ப்பு இல்லாமல் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன. அவற்றில், குறிப்பிட்ட சில நிகழ்வுகளை மட்டும் கீழே பார்க்கலாம்.

**தேசிய கீதம் / வந்தே மாதரம் முன்னிலைப்படுத்தப்பட்டு**

**தமிழ்த்தாய் வாழ்த்து பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது**

தமிழகத்தில் நடைபெறும் அரசு மற்றும் பொது நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலிலும், தேசிய கீதம் இறுதியிலும் பாடப்படுவதுதான் நீண்டகால மரபாகவும், அரசாணையாகவும் பின்பற்றப்பட்டு வருகிறது.

ஆனால், ஆளுநர் மாளிகையில் நடந்த தவெக அரசின் பதவியேற்பு விழாவின்போது 'வந்தே மாதரம்' மற்றும் 'தேசிய கீதம்' முதலில் பாடப்பட்டு, தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டது. மேற்கு வங்கத்தில் வந்தே மாதரம் பாடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து தமிழ்நாட்டின் சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்கும் போதும் இந்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என்று ஆளுநர் வலியுறுத்தியுள்ளதாக செய்திகள் வருகின்றன. அதனடிப்படையில்தான் முதலமைச்சர் விஜயும் பிரதமர் மோடியைச் சந்தித்தபோது தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் இசைப்பதற்கான அனுமதியைக் கேட்டு வந்துள்ளார்

திமுக ஆட்சிக்காலத்தில் (2021 இல்) தமிழ்த்தாய் வாழ்த்து மாநிலப் பாடலாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு, அதற்கென தனியாக அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி, தமிழகத்தில் நடக்கும் அனைத்து அரசு, கல்வி மற்றும் பொது நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், நிறைவில் தேசிய கீதமும் பாடப்பட வேண்டும் என்பது விதி. எனவே இதனை அப்படியே பின்பற்றலாம். இதற்கு ஒன்றிய அரசின் அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை.

கடந்த தி.மு.க ஆட்சியின் போது, தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத்தொடரின் தொடக்கத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என ஆளுநர் தெரிவித்த போது அதற்கு எதிராக அப்போது விஜய் கருத்து தெரிவித்திருந்தார். தற்போது, தனது ஆட்சியின் போதும் இந்த நெருக்கடி தற்போதைய ஆளுநரால் கொடுக்கப்படுகிறது. எனவே, தனது முந்தைய கருத்தில் உறுதியாக இருந்து ஆளுநரின் அழுத்தத்திற்கும், பாஜக- வின் 'இந்தி-சமஸ்கிருத' திணிப்பு அரசியலுக்கும் த வெக அரசு பணிந்துவிடக் கூடாது.

**பக்ரீத்திற்கு பொதுவெளியில் மாடு வெட்டத் தடை**

தமிழ்நாட்டில் பக்ரீத் பண்டிகை நாளிலோ அல்லது வேறு எந்த நாட்களிலோ மாடுகள் வெட்டுவதற்கு நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன் மற்றும் வி. லட்சுமிநாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு தடை விதித்து உத்தரவிட்டது.

உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவு வந்த உடனே, அரசுத் தரப்பு உடனடியாக உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று இதற்கு எதிராக மேல்முறையீடு செய்திருக்க வேண்டும். ஆனால், தவெக அரசு அதற்கு மாறாக, நீதிமன்ற உத்தரவை மீறுவோர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அனைத்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியது. மேலும், பொது இடங்களில் தற்காலிகமாக மாடுகள் வெட்டப்படுவதைக் கண்காணிக்கவும், தடுக்கவும் சிறப்புப் படைகள் அமைத்து சிறுபான்மையினரின் மதச் சடங்குகளுக்கும் உணவு உரிமைக்கும் எதிராக நின்றது.

நாங்கள் சிறுபான்மையினருக்கான அரசுதான் என்று மேடையில் பேசுவதோடு இல்லாமல் நடைமுறையில் அவர்களுக்கு உற்ற துணையாக இருந்திருக்க வேண்டும். எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதுதான் வேதனை.

**திருவள்ளுவருக்குக் காவி சாயம்.**

முன்பு ஆர்.என். ரவி ஆளுநராக இருந்தபோது செய்த அதே இந்துத்துவ நாசகர வேலையைத்தான், தற்போதைய ஆளுநரான ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரும் செய்யத் தொடங்கியுள்ளார்.

கடந்த மே 30 அன்று ஆளுநர் மாளிகையில் நடந்த 'வைகாசி அனுசம்' என்ற பெயரில் (வள்ளுவர் நாள்) விழா நடத்தி அவ்விழாவில், தற்போதைய ஆளுநர் அர்லேகர் காவி உடை, திருநீறு மற்றும் ருத்ராட்சம் அணிந்த திருவள்ளுவர் படத்தைக் காட்சிப்படுத்தியதோடு, திருவள்ளுவரை "சனாதன மரபின் அடையாளம்" என்றும் குறிப்பிட்டார்.

தவெக அரசின் சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ், "வள்ளுவரை ஒரு குறிப்பிட்ட மத நிறத்திற்குள் அடைக்க நினைப்பது கடலை ஒரு குடத்திற்குள் அடைக்க முயல்வது போன்றது; அரசியல் லாபத்திற்காக அவருக்குக் காவி சாயம் பூசுவது ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று கூறினாலும் தமிழ்நாட்டின் முதல்வராக இருக்கும் விஜய் மௌனம் காப்பது சரியல்ல, அவர் மௌனம் கலைத்துத் தமிழ்ப் பண்பாட்டைத் தமிழ்நாட்டின் அறவோர்களை இழிவுபடுத்துவதைத் தடுக்க வேண்டும்

**திருப்பரங்குன்றம் ஆவணப்படம் திரையிட தடை,**

அறக்கலகம் ஊடகத்தின் சார்பாக, ஊடகவியலாளர் தவம் மற்றும் தமிழ்தாசன் ஆகியோரால் திருப்பரங்குன்றம் என்ற ஆவணப்படம் எடுக்கப்பட்டு அதைப் புதுக்கோட்டையில் 'வீதி கலை இலக்கியக்

களம்' என்ற அமைப்பின் சார்பில் சூன் மாதத் தொடக்கத்தில் திரையிடல் நிகழ்வை நடத்த இருந்தது

இந்த ஆவணப்படத்தைத் திரையிட்டால் அப்பகுதியில் சட்டம் மற்றும் ஒழுங்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது" என்றும், இது "மேலிட உத்தரவு" என்றும் கூறித் திரையிட தடைவிடித்தது காவல்துறை

நீதிமன்றத் தீர்ப்புகளின் முரண்பாடுகள் மற்றும் அங்குள்ள இரு மத மக்களின் நீண்டகால நல்லிணக்கத்தை மையமாகக் கொண்டு இப்படம் எடுக்கப்பட்டுள்ளது. திருப்பரங்குன்றத்தை "அயோத்தி" போல மாற்ற நினைக்கும் சில வலதுசாரி மற்றும் மதவாத சக்திகளின் சதித்திட்டங்களை இந்த ஆவணப்படம் அம்பலப்படுத்துகிறது. எனவேதான் சங் பரிவார் கும்பல் இந்தப் படத்தைத் தடை செய்ய வைத்துள்ளது

பெரியார், அம்பேத்கர் கொள்கைகளைப் பேசுவதாகக் கூறும் தற்போதைய தவெக அரசு, வலதுசாரி அமைப்புகளுக்கு அஞ்சி இதுபோன்ற சமூக விழிப்புணர்வு ஆவணப்படங்களைத் தடை செய்வது சங் பரிவார் கும்பலுக்கு ஊக்கத்தைக் கொடுத்து விடும்.

இவையல்லாமல், பெரியாரிய, முற்போக்கு சமூக ஊடகங்கள் மீதான தடை என இந்துத்துவச் செயல்பாடுகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. நிர்வாகக் குளறுபடிகளைப் பேசுவதை விட இந்துத்துவச் செயல்பாடு குறித்து நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த இந்துத்துவச் செயல்பாடுகள் குறித்து சன் டிவி , கலைஞர் டிவி உள்ளிட்ட எந்த ஊடகங்களும் பேசப்போவதில்லை, நாம் தான் பேச வேண்டும். திமுகவை மீண்டும் ஆட்சிக்கட்டில் அமர வைத்தால் அவர்களுக்குப் போதுமானது, நமக்கு அப்படி இல்லையே? சட்டம் ஒழுங்கு குறித்துப் பேசுவதற்குப் பல்லாயிரம் பேர் இருக்கிறார்கள், ஆனால் இந்துத்துவச் செயல்பாடு குறித்து பேசுவதற்கு நாம் மட்டும்தான் இருக்கின்றோம்.

நாமும் சட்ட ஒழுங்கு குறித்துப் மட்டும் பேசி விட்டுச் சென்றால் இந்துத்துவச் செயல்பாடுகள் குறித்து யார் பேசுவது ? எனவே நாம் கூடுதல் கவனம் செலுத்தி விஜய் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கும் இந்துத்துவச் செயல்பாடுகளை உற்று நோக்கி நமது கண்டனங்களைச் சரியாகப் பதிவு செய்து, களத்தில் போராட வேண்டும். ஏனெனில் நமக்கு இந்துத்துவத்தை வீழ்த்த வேண்டிய பெரும் கடமை உள்ளது.

**கடந்த 31.5.2026 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்ற அக்கா இளவேனில் கழராம்பன் அவர்களின் நினைவேந்தல் படத்திறப்பு நிகழ்ச்சி**



## நானும் என் தாய்த்தமிழும்

—அருள்எழினி

**எத்தனை உறவுகள்
வந்தாலும்
என்னுறவாய்
என்றும் இருப்பவள் நீயே..**

**உலகில் எனக்கு ஒரு பெயர்..
அவளின் பெயரோ எனக்கு உயிர்..**

**என் நாவில் அவள் ஆடுவது நடனம்..
என் இதயத்துடிப்புக்கோ அவள் இலக்கணம்..**

**புரியாத புதிராய் நான்
நின்றபோது
புதியதொரு பொருளாய்
எனக்கு அளித்தவள்..**

**அவளின்
கழகத்தமிழில் நான்
கலந்தேன்..
கன்னித்தமிழை நான்
காதலித்தேன்..
வண்ணத்தமிழில் நான்
வளர்ந்தெழுந்தேன்..
அன்னைத்தமிழே உன்னிடம்
அடைக்கலமானேன்..**

**அலையும் கடலும் போல
தேடித்தேடி நான் சோர்ந்தாலும்
தேடாமலேயே
என்னைத் தழுவிக் கொண்டவள்..**

**நான் இல்லையெனினும்
அவள் இருப்பாள்..
அவள் இல்லாமல்
நான் இல்லை..
எனக்குள் அவள்
அவளுக்குள் நான்..** ●

**தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்**

| | |
|---|---|
| திரு. தென்முகநம்பி, சென்னை | 1000 |
| திரு. பிச்சைவள்ளிநாயகம், சென்னை | 1000 |
| செங்குட்டுவன் ஆவடி | 500 |
| முனைவர் முத்தமிழ், சென்னை | 500 |
| திரு. மதிவாணன், தேவத்தூர் | 500 |
| தோழர் சீனிவாசன், சென்னை | 3000 |

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
தமிழ்நாடு (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005